www.padippakam.com

**அவாளுக்கும் இவாளுக்கும் சண்டை- நிஜமா? நிழலா?**

1 ஜூலை '95 ☐ ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்




## சாதி அரசியலின் அலங்கோலம்

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்க

## ஏழைகள் என்றால் இப்படியும் சாவா?

**க**டந்த மே 25-ந் தேதியன்று அரியானா மாநிலம் ரோடாக் நகரிலுள்ள ஒரு வெடி மருந்து தொழிற்சாலையில் நடந்த கோரமான வெடி விபத்தில் 13 பெண்கள், 6 குழந்தைகள் உட்பட 23 பேர் கொல்லப் பட்டுள்ளனர். 15 பேர் படுகாயமுற்று மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இதில் கொடுமை என்னவென்றால், மாண்டு போன அனைவருமே தமிழகத்தின் சிவகாசியைச் சேர்ந்தவர்கள். பிழைக்க வழியில்லாமல் பல மைல்களைக் கடந்து இங்கு வந்து, கள்ளத்தனமான வெடிமருந்து ஆலையில் உயிருக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வேலை செய்து, குடும்பம் குடும்பமாகப் பலியாகியுள்ளார்கள். தமிழர்களுக்குப் பிறந்த மண்ணிலே பிழைக்க வழியில்லை; வட மாநிலங்களில் கொத்தடிமைகளாகி நிராதரவாக மாண்டு போகுமளவுக்கு ஏழைத் தமிழர்களின் உயிர் மலிவாகிப் போய்விட்டது. 20 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சி நடத்தும் திராவிடக் கட்சிகளின் 'சாதனை' இதுதான்.

## இளைஞர்களின் போர்க்கோலம்

**ம**காராஷ்டிர மாநிலம் நாசிக் நகரில் உள்ள வட்டார வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பத்தாண்டுகளுக்கு முன்பு பதிவு செய்து விட்டு இன்னமும் வேலை கிடைக்காத இளைஞர்கள் அண்மையில் நூதன போராட்டத்தை நடத்தியுள்ளனர். நூற்றுக்கணக்கா வேலை கிடைக்காத இளைஞர்கள் அணிதிரண்டு இந்த அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்ததோடு, அலுவலகக் கோப்புகளை கிழித்து தீயிட்டுக் கொளுத்தினர். குறிப்பாக, கையில் மண்ணெண்ணெய் டப்பாவுடன் பெருந்திரளாகப் பங்கேற்ற பெண்கள் அதிகாரிகள் மீது எண்ணெயை ஊற்றி தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளனர். சொரணை கெட்ட ஆட்சியாளர்களுக்குச் சூடு வைத்தால்தான் புரியும் என்று இளைஞர்கள் பொருத்தமான முறையில் தான் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.



அரியானா கள்ள வெடிமருந்து விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள்.

## ஆரூட போதையில் ஆடும் ஆந்திர முதல்வர்

**க**டந்த மே 22-ந் தேதியன்று ஆந்திராவின் தலைநகர் ஐதராபாத்திலுள்ள அரசு தலைமைச் செயலகத்தின் பின்புறமிருந்த 9 வீடுகளை என்.டி.ஆர்.அரசு இடித்து தரை மட்டமாக்கியுள்ளது. மனையடி சாஸ்திர முறைப்படி, முதல்வர் என்.டி.ஆர். தலைமைச் செயலகத்தின் கிழக்குப்புற வாயில் வழியே நுழைந்து வடக்குப்புற வாயில் வழியே வெளியேறுவதுதான் அவருக்கும் அவரது ஆட்சிக்கும் நல்லது என்று ஜோதிடர்கள் உபதேசித்துள்ளார்களாம். ஆனால் வடக்கு வாசல் அருகே சுற்றுச் சுவரும் அதையடுத்து குடியிருப்பும் உள்ளதால் சாலை வசதி இல்லை. ஜோதிட சாஸ்திர மூட நம்பிக்கையில் மூழ்கியுள்ள முதல்வர் என்.டி.ஆர், தனது சுயநலனுக்காக, புறம்போக்கு நிலத்தில் சட்ட விரோதமாக குடியிருப்பதாகக் கூறி 9 வீடுகளை இடித்து சாலையை அமைத்துக் கொண்டுள்ளார். ஏழைகளின் தெய்வமாக சித்தரிக்கப்படும் ''அண்ணாரு'' என்.டி.ஆரின் யோக்கியதை எப்படியிருக்கிறது பாருங்கள்.

## சாராய தேசியம்!

**ம**தவெறியைக் கிளறிவிட்டு தேச ஒற்றுமையைச் சாதிக்கக் கிளம்பியுள்ள இந்துவெறி பாசிஸ்டுகளைப் போலவே, ரஷியாவின் பாசிச எதிர்க்கட்சித் தலைவரான ஜிரினோவ்ஸ்கி, சாராயத்தின் மூலம் தேச ஒற்றுமையைக் கட்ட கிளம்பியுள்ளார். ரஷியாவின் வோட்கா சாராய ஆலையைக் கைப்பற்றியுள்ள இவர், சாராய புட்டிகளில் தனது பெயரையும் உருவத்தையும் பொறித்து, வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள தேர்தலைக் குறிவைத்து ''தேச ஒற்றுமையின் சின்னம்'' என்ற அடைமொழியுடன் நாளொன்றுக்கு 5 லட்சம் புட்டிகளுக்கும் மேலாக இச்சாராயத்தை மலிவு விலையில் விற்பனை செய்து வருகிறார். மதம், இனம், பால், வயது வேறுபாடுகளைக் கடந்து 'குடி'மக்களை ஒன்றிணைப்பது வோட்காதான் என்று பெருமையோடு கூறுகிறார் இப் பாசிசத் தலைவர். எப்படியிருக்கிறது, பாசிசத் தலைவரின் சாராய தேசியம்?



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

பத்தாம் ஆண்டு

**13 - 15**

16 மே - 31 ஜூன் '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.00
ஆண்டு சந்தா: ரூ. 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


## உ.பி.: தலித் தலைமையில் ''இந்து ராஷ்டிரம்''

உத்திரப் பிரதேச மாநிலத்தில் சமாஜ்வாடி - பகுஜன் சமாஜ் கட்சிகளுக்கிடையிலான கூட்டணி முறிந்ததைத் தொடர்ந்து, முலயம்சிங் தலைமையிலான அரசு கலைக்கப்பட்டு, பகுஜன் சமாஜ் கட்சி சிறுபான்மை அரசை நிறுவியுள்ளது. அக்கட்சியின் பொதுச்செயலரான மாயாவதி, எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவின் ஆதரவுடன் புதிய முதல்வராகியுள்ளார். கோடிகோடியாய் பேரம், ரகசிய 'குதிரை' வியாபாரம், எம்.எல்.ஏக்கள் கடத்தல், வன்முறைத் தாக்குதல் என இதுவரை கண்டிராத அராஜகங்களுக்குப் பிறகு, முதன்முதலாக தலித் தலைமையில் பார்ப்பன - மேல் சாதிவெறியர்களின் ஆட்சி நிறுவப்பட்டுள்ளது.

ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு உ.பி.யில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் முலயம்சிங்கின் சமாஜ்வாடி கட்சியும் கன்ஷிராமின் பகுஜன்சமாஜ் கட்சியும் கூட்டணி கட்டிக் கொண்டு சிறுபான்மை அரசை நிறுவியதும், ''இது மதச்சார்பின்மைக்கும் சமூக நீதிக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி'' என்று மண்டல் ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்தார்கள். இப்பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் கூட்டணியானது, ''லோகியாவும் அம்பேத்காரும் கண்ட கனவை நனவாக்கிய மாபெரும் வரலாற்றுச் சாதனை'' என்று கூத்தாடினார்கள். அத்தனையும் இன்று புஸ்வாணமாகி, சமூகநீதி மாயையை மாயாவின் புதிய ஆட்சி ஏற்பட்டது தோலுரித்துக் காட்டிவிட்டது.

உ.பி.யில் இப்போது அதிகாரத்தை இழந்த பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் கூட்டணியானது அரசு பதவிகள், சலுகைகள், சன்மானங்களைக் கைப்பற்றுவதற்காக உருவானதுதான். இதில் என்றைக்குமே ஐக்கியம் நிலவியது கிடையாது. கூட்டணியை முறித்துக் கொள்வோம் என்று நிர்பந்தித்து அரசு பதவிகள் - சலுகைகளை பகுஜன் சமாஜ் அனுபவித்தது என்றால், தமது பிற்பட்ட யாதவ சாதியினரை அரசு பதவிகளில் முறைகேடாகத் திணித்து தமக்கு ஓர் வலுவான சாதிய அடிப்படையை முதல்வர் முலயம்சிங் உருவாக்கிக் கொண்டார். பகுஜன் சமாஜ் கட்சியை மிரட்டிப் பணிய வைக்க யாதவ் - குர்மி முதலான பிற்பட்ட சாதிவெறியர்கள் தலித்துகள் மீது கொலைவெறித் தாக்குதலை ஏவிவிட்டனர். இப்படி நித்திய கண்டம் பூரண ஆயுசுமாகத்தான் இக்கூட்டாணி நீடித்தது.

குறிப்பாக, அண்மையில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் வெளிப்படையாகவே பகுஜன் சமாஜ் கட்சியை தோல்வியறச் செய்து முலயம்சிங்கின் கட்சி தனது சாதி பலம், கிரிமினல் குண்டர்பலம், அரசு அதிகார பலத்தைக் கொண்டு வெற்றி பெற்றது. இதனால் ஏற்பட்ட ஆத்திரம், ஆட்சியதிகாரத்தில் உரிய பங்கு கிடைக்காததால் ஏற்பட்ட வெறுப்பு ஆகியவற்றால் பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணியை முறித்துக் கொண்டு முலயம்சிங்கைப் பழிவாங்கியது. இத்தருணத்திற்காகவே காத்திருந்த பாரதீய ஜனதா, பகுஜன் சமாஜ் கட்சியை வெளியிலிருந்து ஆதரித்து, சிறுபான்மை தலித் ஆட்சியை தனது தயவில் நிறுவியுள்ளது.

தேர்தலின் போது, ''பாரதீய ஜனதா ஒரு மனுவாதக் கட்சி; இராமனை ஆற்றிலே வீசுங்கள்; அயோத்தியில் கழிப்பறைகள் கட்டுவோம்'' என்று இந்துவெறியர்களுக்கு எதிராக முழங்கிய பகுஜன் சமாஜ் கட்சி இப்போது ''ஜெய் சிறீராம்! ஜெய் கன்ஷிராம்!'' என்று வெட்கமின்றி முழங்குகிறது. ''பாரதீய ஜனதாவின் போக்கு வெகுவாக மாறிவிட்டது'' என்று வெட்கமின்றி சான்றிதழ் கொடுக்கிறார், 'அம்பேத்காரின் வாரிசு' கன்ஷிராம். முலயம்சிங் எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து சாதி - மதக் கலவரத்தைத் தூண்ட முயற்சிக்கிறார் என்று பாரதீய ஜனதாவின் குரலை அப்படியே எதிரொலிக்கிறார் புதிய முதல்வர் மாயாவதி. பதவியைப் பிடித்தவுடனேயே, அரசியல் கட்சிகளின் பேரணி - பொதுக்கூட்டங்களுக்குத் தடைவிதித்தும், முந்தைய அரசு அதிகாரிகள் - போலீசு அதிகாரிகளை உடனடியாக இடமாற்றம் செய்தும் பாரதீய ஜனதா எதிர்பார்ப்புகளை அவர் விசுவாசமாக நிறைவேற்றக் கிளம்பிவிட்டார்.

தற்போதையை ஆட்சியதிகார பலத்தைக் கொண்டு, வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கணிசமான அளவுக்கு தலித் எம்.பி.க்களை வெற்றி பெறச் செய்து, தமது ஆதரவு இல்லாமல் எந்தக் கட்சியும் டெல்லியில் ஆட்சிக்கு வரமுடியாத நிலையை ஏற்படுத்தி, அரசு பதவிகள் - சன்மானங்களை மேலும் கூடுதலாகக் கைப்பற்றலாம் என்று கன்ஷிராம் கட்சி கணக்கு போடுகிறது. பாரதீய ஜனதாவோ, அன்றைய சிறுபான்மை சந்திரசேகர் அரசை ராஜீவ் கும்பல் ஆட்டுவித்ததைப் போல, அரசு எந்திரந்தில் தமது விசுவாசிகளை நியமித்து தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாதகமான நிலைமையை மாயா அரசு மூலம் ஏற்படுத்திக் கொள்வது; தலித்துகளின் நண்பனாக வேஷங்கட்டி ஆடுவது என்கிற உத்தியுடன் அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்துகிறது. காங்கிரசு, ஜனதாதளம் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் முலயம்சிங் திரட்டி வைத்துள்ள பிற்பட்டோரின் ஓட்டு வங்கியை இழக்க விரும்பவில்லை. அதேசமயம் தலித் ஓட்டுக்காக மாயாவின் அரசை ஆதரிக்கவும் தயாராக இல்லை. பகுஜன் சமாஜ் - பாரதீய ஜனதாவின் சந்தர்ப்பவாதக் கூட்டணி நீடிக்க அடிப்படை இல்லை என்பதால் அதை அம்பலப் படுத்தி முறியடிப்பது, வகுப்புவாத எதிர்ப்பு ஜனநாயக நாடகமாடி தலித்துகளில் ஒரு பிரிவினரை தம் பக்கம் திரட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்குவது, முலயம்சிங்கை தமது கூட்டணிக்கு இழுப்பது என்று திட்டத்துடன் கிளம்பியுள்ளன.

விவசாயப் புரட்சியை நோக்கமாகக் கொண்டு வர்க்கப் போராட்டத்தினூடாக கீழிருந்து கட்டியமைக்கப் படும் கூட்டணி தவிர, ஆட்சியைப் பிடிக்கும் நோக்கத்தோடு ஓட்டுக்கட்சிகளிடையே மேல் மட்டத்தில் உருவாக்கப்படும் இத்தகைய சந்தர்ப்பவாத சாதியக் கூட்டணிகள் ஒருபோதும் நீடித்து நிற்க முடியாது. தலித் தலைமையிலான பார்ப்பன ஆட்சியானாலும், பார்ப்பனத் தலைமையிலான சூத்திர ஆட்சியானாலும் சமூக நீதியை ஒருக்காலும் சாதிக்கவும் முடியாது. இவை இந்துவெறி பாசிஸ்டுகளுக்கே சாதகமாக அமையும். ●

படிப்பகம்

www.padippakam.com

# அவாளுக்கும் இவாளுக்கும் சண்டை — நிஜமா? நிழலா?

''இது நம்மவாள் ஆட்சி. இதை எப்பாடுபட்டாவது காத்திட வேண்டும்'' என்று ஜெயலலிதா முதல் மந்திரியானதை தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் ''தாம்பராஸ்'' பத்திரிக்கையில் அதன் ஆசிரியரும் தலைவருமான பாலசுப்ரமணியம் பிரகடனம் செய்தார்.

''ஆமாம்! நான் பாப்பாத்திதான். பாப்பாத்தின்னா சேவை செய்ற சாதின்னு அர்த்தம். ஆகவே, பாப்பாத்தின்னு சொல்லிக்கிறதிலே பெருமைப்படறேன்'' என்று சட்டப் பேரவையில் பகிரங்கமாகவே பீற்றிக் கொண்டார், ஜெயலலிதா.

அன்று பாப்பாத்திதான் என்று பெருமையடித்துக் கொண்டவர், இன்று ''சமூகநீதி காத்த வீராங்கனை'' என்று பட்டஞ் சூட்டிக் கொண்டு பகட்டித் திரிகிறார். இது பார்ப்பனர்களுக்குக் கிடைத்த தோல்வியா? வீரமணி, நெடுமாறன் போன்ற சமூக இனமானத் தளபதிகளுக்குக் கிடைத்த வெற்றியா?

அதேபோல, ''என்னை யாரும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது'' என்று அதே சட்டப் பேரவையில் ஆணவத்தோடு சவால் விட்டார், ஜெயலலிதா. ஆனால் இன்று, ஜெயலலிதாவின் கண்களில் விரல் விட்டு ஆட்டிக் கொண்டிக்கிறார் சுப்ரமணியசாமி. இவருக்குப் பக்கத்துணையாக துக்ளக் சோ. ராமசாமி முதலான பார்ப்பனப் பத்திரிகைகள் பலவும் அணி வகுத்து நிற்கின்றன.

''வேறு எந்த ஆட்சியிலும் தமிழகம் இவ்வளவு தாழ்ந்தபோனது கிடையாது ஊழல்மூலம்நடக்கும் பகல் கொள்ளை யிலும் சரி, அரசின் ஆசியுடன் நடக்கும் அராஜகங்களிலும் சரி, சுய விளம்பர விவகாரத்திலும் சரி, ஆளும்கட்சியின் தொண்டர்படையாக போலீஸ் துறை மாறியிருப்பதிலும் சரி, எதிர்க் கட்சிகளும் எதிர்ப்பாளர்களும் - தாலித் கூட்டங்களி னால் தாக்கப்படுவதிலும் சரி, கூசாமல் பொய் கூறுவதிலும் சரி.... இந்த ஆட்சியின் இன்றைய கேவலத்திற்கு நிகரான ஆட்சியை, இதுவரை தமிழகம் கண்டதில்லை. இவர் நீக்கப்பட வேண்டிய முதல்வர். இது போய்த் தொலைய வேண்டிய ஆட்சி'' - இது ஜெயலலிதாவின் சிறுவயதுமுதல் உற்ற நண்பனாய் பழகிய, பார்ப்பன சமூகத்துக்கு ராஜாஜிக்குப் பிறகு வந்த சாணக்கியனாய் விளங்கும் சோ. ராமசாமி எழுதிய தலையங்கம்.

இந்த அளவு, உக்கிரமாக இல்லை என்றாலும் ராமசுப்பு அய்யரின் தினமலர் தவிர ஏனைய பார்ப்பன ஏடுகள் எல்லாம் ஜெயலலிதா அரசைக் கண்டிக்கின்றன; அல்லது மிதமான முறையிலாவது விமர்சிக்கின்றன, தினமணி, ஜூனியர் விகடன் போன்றவை சில அம்பலப்படுத்தும் வேலைகளைக் கூட செய்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, பார்ப்பன குல தர்ம ஏடான ''இந்து''வை சட்டப்பேரவையில் பகிரங்கமாகவே தாக்கி பேசுகிறார், ஜெயலலிதா. தினமணி நாளேட்டுக்குக் கண்டன அறிக்கை வெளியிடுகிறார். இந்த ஏடுகள் ஜெயலலிதாவுக்கு மறுப்பும் எழுதுகின்றன.

ஒழிக்கப்பட வேண்டிய தீய சக்தி என்று ஜெயலலிதா இதுவரை சித்தரித்து வந்த கருணாநிதியை விட, சுப்ரமணிய சாமிக்கு முடிவு கட்டிவிட்டுத்தான் மறுவேலை என்ற கங்கணங்கட்டிக் கொண்டு அலைகிறார்.

தி.மு.க.வின் இரண்டு பிரிவுகள், காங்கிரசின் இரண்டு பிரிவுகள், ''கம்யூனிஸ்டு''களின்'இரண்டு பிரிவுகள் ஆகிய எல்லாமே ஜெயலலிதாவின் எதிரணியில் நிற்கின்றன. இவர்கள் தவிர ஜெயலலிதாவை அண்டிப் பிழைத்தவர்கள், அவர் ஆட்சிக் கட்டிலேறப் பாதந்தாங்கியவர்களான வாழப்பாடி, த. பாண்டியன், திருநாவுக்கரசு, பண்ருட்டி, ராஜாராம் ஆகிய பலபட்டறைகளும் ஜெயலலிதாவுக்கு துரோக அணிகளாக அமைந்துள்ளனர்.

இத்தனை அரசியல் கூத்தாடிகளிலும் ஒருவரை ஒருவர் பரம எதிரிகளாகக் கருதி அரசியல் பழி தீர்த்துக் கொள்வதற்குத் துடித்துக் கொண்டிருப்பவர்கள் இன்றைய தினம் - ஜெயலலிதாவும் சுப்பிரமணிய சாமியும்தாம்.

மற்றவர்கள் அத்தனை பேரும் இந்த இருவரின் பின்னே அணி திரண்டு நிற்கிறார்கள் - கோழி சண்டையில் உசுப்பேற்றிவிடும் பந்தயக்காரர்களைப் போல. இப்போது தமிழ்நாட்டில் நாம் காணும் இந்த அரசியல் காட்சி இயல்பாகவே கேள்வி எழுப்பியுள்ளது.

''அந்தப் பாப்பாத்திக்கும், இந்தப் பாப்பாரக் கும்பலுக்கும் இடையில் நடப்பது நிஜ சண்டையா? அல்லது நிழல் சண்டையா?''

தமிழ் மக்கள் நிரம்பவும் குழப்பப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு அளவுகளில் பார்ப்பன எதிர்ப்பாளர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்டுள்ள கருணாநிதி, ராமதாசு, வை.கோ. முதல் வீரமணி, நெடுமாறன் வரை அனைவருமே நடப்பது நிஜச் சண்டைதான் என்று சாதிக்கிறார்கள். இந்தக் கேள்விக்கு இறுதிவிடை காணும் முன்பு இந்தநிலை எப்படி வந்தது என்பதைப் பார்ப்போம்.

தமிழ்நாட்டு மக்களின் தற்போதைய முதலாவது எதிரி, பார்ப்பன-பாசிச ஜெயலலிதா கும்பல்தான். அதேசமயம் அக்கும்பல், சுப்ரமணிய சாமிக்கு எதிராகக் கூறிவரும் குற்றசாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்று அவரது பூர்வீகமும், புழக்கமும் அறிந்த அனைவரும் ஒப்புக் கொள்வர்.

சுப்ரமணியசாமியின் அரசியல் வாழ்க்கை, ஜெயலலிதாவினுடையதைப் போலவே, இரகசிய - மர்மங்களும், சதி - சூழ்ச்சிகளும், கேடான குறுக்கு வழிகளும் நிறைந்தவைதாம். மக்கள்

சந்திரலேகா, சாமி, சென்னா, - 'ஜெ'. எதிர்ப்பணி





படிப்பகம்

www.padippakam.com

பார்த்து - பரிசீலித்து, மதிப்பீடு செய்து தெரிந் தெடுப்பதற்கான திறந்து புத்தகமாக இருவருடைய அரசியலுமே இருந்த தில்லை.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ., இசுரேலிய உளவு நிறுவனமான மொசாத் மட்டுமல்ல உலக ஆயுத விற்பனை - கடத்தல் முதலிய இரகசிய உலகப் பேர்வழிகளான ஆதனான் கஷோகி, சந்திராசாமி போன்ற நெருக்கமான தொடர்புகளைக்' கொள்பவர் சுப்ரமணிய சாமி. இதை அவரே மறுப்பதில்லை. இந்தியாவில் மட்டுமல்ல, வெளி நாடுகளிலும் பிரபலமான அரசியல் தரகர். இங்கே எம்.பி. எம்.எல்.ஏ.க்களை விலை பேசுவதிலும், அதிகாரிகள் மட்டத்தில் நெருங்கிப் பழகி இரகசியங்களை கடத்துவதிலும் வல்லவர் சுப்ரமணியசாமி. இவற்றையே ஆதாரமாக வைத்து கட்சிகளைப் பிளப்பது, ஆட்சிகளைக் கலைப்பது, ஆட்சிகளை உருவாக்குவது, அரசியல் உருட்டல் மிரட்டல்களில் ஈடுபடுவது ஆகியவை அவரது அரசியல் தரகு வேலையின் கைவந்த கலை. இதற்கெல்லாம் அடிப்படை தலைநகர் டெல்லியில் உள்ள அரசு மற்றும் கட்சிகளின் பார்ப்பனத் தலைமையிடமும், இரகசிய உலகப் பேர்வழிகளுடனும், அந்நிய நாடுகளின் தூதரக அதிகாரிகளுடன் அவருக்குள்ள 'நெருங்கிய தொடர்புகள்' தாம். உரிமம் பெற்ற அரசியல் ''பிராணியாய்'' ஒருபோதும் அவர் இருந்ததில்லை. ''தெரு பிராணியாய்'' எப்போதும் அலைந்து கொண்டிருந்தாலும், சமயம் வாய்க்கும் பொழுது, ஆளும் அதிகாரத்துக்கு வரும் கட்சி - தலைமையுடன் ஒட்டிக் கொண்டு ஆதாயம் அடைவதில் தவறமாட்டார்.

இப்படித்தான் ஆர்.எஸ். எஸ். கும்பலின் ஆதரவுடன் நாடாளுமன்ற மேலவை எம்.பியான சுப்ரமணிய சாமி, 1975-77 அவசர நிலை ஆட்சி முடிந்ததும் ஜனதாக் கட்சி கலவையில் ஒட்டிக் கொண்டு மீண்டும் எம்.பி. ஆனார். அதற்கான தகுதி, - கைதாகாது வெளிநாடுகளுக்குத் தப்பிப்போய் பிரச்சாரம் செய்தார். இந்திய உளவுத் துறையையே ஏமாற்றிவிட்டு நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து பேசிவிட்டு, மீண்டும் தப்பிப் போய்விட்டார் என்பதுதான். இதற்காக ஜனதா ஆட்சியில் மந்திரி பதவி எதிர்பார்த்து ஏமாந்தார்.

ஜனதா ஆட்சியைக் கவிழ்த்து, ஜனதாக் கட்சியைப் பிளந்து, மீண்டும் இந்திரா ஆட்சியை ஏற்படுத்துவதில் சஞ்சய் காந்திக்கு எதிரி முகாமில் ஒளிந்து கொண்டு உதவி உளவு வேலை செய்து வந்தார். அடுத்த பத்தாண்டுகளில், ஜனதா கட்சி சுக்கல் சுக்கலான போதும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் ஒட்டிக் கொள்வதிலும், ஜனதா கட்சியினர் பதவியில் ஒட்டிக் கொள்வதிலும், ஜனதாக் கட்சி பெயரையும், சின்னத்தையும் தனியொரு சிறு கும்பலாக கைப்பற்றிக் கொள்வதிலும் வெற்றி பெற்றார். ராஜீவ் போஃர்பாஸ் பீரங்கி, ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல் பேர ஊழல்களில் சிக்கிக் கொண்ட போது, லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து அவரை மீட்பதற்கு சுப்ரம்ணியசாமி வேலை செய்தார். ஆனால் எதிர்த்தரப்பாக ஜனதா தளம் அமைந்தபோது அதோடு ஒட்டிக் கொண்டார். ஜனதா தளம் தேசிய முன்னணி ஆட்சியிலும் மந்திரி பதவி எதிர்பார்த்து ஏமாந்ததும், அதன் உள்ளிருந்தே ஆட்சியைக் கவிழ்க்கவும், ராஜீவுக்கு உதவும் ஐந்தாம் படையாகவும், வேலை செய்தார். ராஜீவுடன் சதி செய்து கர்நாடகாவில் இருந்த பொம்மை ஹெக்டே



பாஸ்கரன், திவாகர், சசிகலா, - ஜெயாவின் சொந்தமில்லாத பந்தங்கள்

தலைமையிலான ஜனதா தள ஆட்சியைக் கவிழ்த்தார். அந்த ஆட்சியைக் கவிழ்ப்பதிலும், சந்திரசேகர் தலைமையில் ஒரு அற்பகால ஆட்சியை ஏற்படுத்துவதிலும், அதற்கானராஜீவ் ஆதரவைப் பெற இடைத்தரகு வேலை பார்ப்பதிலும் சுப்ரமணியசாமி முக்கிய பங்காற்றினார். அதற்கு விலையாக (சந்திரசேகர் அமைச்சரவையில் சட்டத்துறை மந்தியானார். மந்திரி சபையில் இருந்து கொண்டு தரகு பெருமுதலாளிகளுக்கும் ஏகாதிபத்தி யத்திற்கும் ஊழியம் செய்தார். இசுரேலுடன் தூதரக உறவு ஏற்படவும், வளைகுடாப் போரில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குத் துணை போகவும் தொண்டாற்றினார். தமிழ்நாட்டில் புலிகள் பற்றிய பீதியைத் திட்டமிட்டுப் பரப்பி கருணாநிதி ஆட்சிக் கவிழ்ப்புக்கு காரணமாக இருந்தார்.

சந்திரசேகர் ஆட்சி கவிழ்ந்ததும் ராஜீவோடு ஒட்டிக் கொண்ட சுப்ரமணியசாமி, பின்னர் நரசிம்மராவின் அரசியல் தரகனாகி, அவரது பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்காக அடுத்தடுத்து எதிர்க்கட்சிகளைப் பிளவு படுத்தி, எம்.பி.க்களுக்கு விலை பேசி கட்சி மாறச் செய்தார். இதற்கு நன்றி பாராட்டும் முகமாக சுப்ரமணியசாமிக்கு மத்திய காபினட் மந்திரி தகுதி உள்ள பதவி - உலக வர்த்தக சபையில் ஒரு இந்திய பிரதிநிதியாக - நியமித்து, "Z" வகைப் பாதுகாப்பும் வழங்கியுள்ளார், நரசிம்மராவ். இதை வைத்து பரமசிவன் கழுத்திலுள்ள பாம்பு கருடனுக்கு சவால் விடுவதைப் போல மற்ற அரசியல்வாதிகளை அவர் உருட்டி மிரட்டி வருகிறார்.

இரண்டு விஷயங்களை அடிக்கடி பெருமையுடன் சு.சாமி சொல்லிக் கொள்கிறார். ''தனி ஒரு மனிதனாக நின்று, உலகம் சுற்றி வந்து, இப்படி அரசியல் பண்ணுகிறீர்களே, உங்களுக்கு ஏது நிதி?'' என்று கேட்டால், ''நான் பிராமணன், ஒரு பிராமணன் யாரிமிடருந்து வேண்டுமென்றாலும் கையேந்தி யாசகம் பெறலாம்; தவறில்லை'' என்று பச்சையாகச் சொல்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

மத்திய அரசு, "நரசிம்மராவ் தூண்டிவிட்டு அவரது ஆதரவு இருப்பதால்தான் இவ்வளவு துணிச்சலாக செயல்படுகிறீர்களா?" என்று கேட்டால், "இல்லை, என்னுடைய ஆதரவினால்தான் அவர் பதவியில் இருக்கிறார். அவருடைய தயவில் நான் இல்லை. நான்தான் அவருக்கு பெரும்பான்மை பலம் திரட்டித் தந்திருப்பதோடு பக்கபலமாக இருக்கிறேன்." என்று பீற்றிக் கொள்கிறார்.

சு.சாமியின் மீது எவ்வளவு வெறுப்புக் கொண்டவரானாலும், மேலே அவர் சொல்லும் இரண்டு உண்மைகளை அங்கீகரித்தே ஆக வேண்டும். சு.சாமியின் இவ்வளவு அருமை பெருமைகளைச் சுட்டிக் காட்டி பார்ப்பன சமூகமே பெருமைப் பட்டுக் கொள்கிறது. இப்படிப்பட்டவரிடம் போய் அரசியல் முதிர்ச்சியும் அனுபவமும் இல்லாத ஜெயலலிதா மோதிப் பார்க்கலாமா? என்று கேட்கின்றன தினமணியும், ஜூனியர் விகடனும், துக்ளக்கும். சு.சாமியை ஜெயலலிதா போலீசு கைது செய்ய ஆளாய்ப் பறந்த போதும், மாறுவேடம் பூண்டு அவர் நடத்திய கண்ணாமூச்சி விளையாட்டை வெகுவாகச் சிலாகிக்கின்றனர்.

கருணாநிதி ஆட்சியைக் கலைத்து, ராஜீவுடன் கூட்டு வைப்பது, பேரம் பேசுவது ஆகியவற்றில் ஜெயலலிதாவுக்கு பக்க துணையாக நின்ற சு.சாமிக்கு அவர் மீது இவ்வளவு வெறுப்பு ஏன்? "நாட்டிலேயே மிகக் கொடிய சர்வாதிகாரி, மிகப்பெரிய லஞ்ச ஊழல் பேர்வழி ஜெயலலிதாதான், அவரது ஆட்சியை விரட்டி தமிழ்நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதே எனது நோக்கம்" என்று இப்போது சு.சாமி கூறுகிறார். ஆனால் "ஏறிவந்த ஏணியை அவர் எட்டி உதைத்து விட்டார்; என்னால் பதவிக்கு வந்த ஜெயலலிதா என்னையே மதிக்காமல், அவமானப்படுத்தி விட்டார்; அவரை அரசியலில் இருந்தே ஒழித்துக் கட்டுவேன்" என்று சபதமெடுத்து அதற்குக் கெடுவும் குறித்தார். அப்புறம் நடந்த கதை தமிழ்நாட்டு அரசியல் பார்வையாளர்கள் அனைவருக்கும் தெரியும்.

இந்தச் சம்பவங்களையும், இவற்றில் அநேகமாக எல்லாப் பத்திரிக்கைகளுமே சு.சாமியின் தரப்பை ஆதரிப்பது காரணமாக எழுந்துள்ள கேள்விதான் "அந்தப் பாப்பாத்திக்கும் இந்தப் பாப்பாரக் கும்பலுக்கும் இடையில் நடப்பது நிஜ சண்டையா? நிழல் சண்டையா" இதற்கு இன்னொரு ஆதாரமாகக் கூறப்படுவது, பெரிய சங்கராச்சாரி நூற்றாண்டுவிழா, சாவு உட்பட சங்கரமடத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் எதிலும் ஜெயலலிதா கலந்து கொள்வதில்லை; அதோடு கோவில் மத விவகாரங்களில் ஜெயலலிதாவின் போக்குகளை ஏற்காது நடுச்சங்கராச்சாரி, அதிருப்தியும் கண்டனமும் தெரிவித்து வந்திருக்கிறார்.

ஆனால் நடக்கும் இந்தச் சண்டை நிஜச் சண்டையல்ல; நிழல் சண்டைதான் என்பது கூர்ந்து கவனிப்பவர்களுக்குப் புரியும்.

முதல் விஷயம் பார்ப்பன சமூகம் முழுவதும் ஜெயலிதாவுக்கு எதிரானதாகத் திரும்பிவிடவில்லை; இரண்டாவது விஷயம், சு.சாமி, சோ.ராமசாமி முதலியவர்களின் உண்மையான எதிர்ப்பு ஜெயலலிதாவிற்கு எதிரானதல்ல. அவர் பின்னால் இருந்து கொண்டு பகற்கொள்ளையடிக்கும் சசிகலா - நடராஜன் கும்பல் ஆகிய மாற்று சாதிக்கும்பலுக்கு எதிரானதுதான். ஜெயலலிதா முழுக்கவும் பார்ப்பன சாதியின் செல்வாக்கின் கீழ் வர மறுப்பதால் ஏற்பட்டுள்ள அதிருப்தியும் வெறுப்பும் அவரை எதிர்க்கும் பார்ப்பன கும்பலின் செயலில் நிரம்பி நிற்கிறது.

**ஜெயாவின் ஆட்சி அதிகாரம், சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்வதில் பார்ப்பன கும்பலுக்கும் சசிகலா - நடராஜன் கும்பலுக்கும் இடையில் மோதல்.**

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே ஒரு பிரிவு பார்ப்பன கும்பலிடையே அவர் ஆட்சி மீதான அதிருப்தி ஆரம்பித்து விட்டது. வேதாகமக் கல்லூரி தொடங்கும் அறிவிப்பு, அர்ச்சகர்களுக்கு ஊதிய உயர்வு - ஓய்வு கால சம்பளம், ஆலயங்கள் புதுப்பிப்பு, ஆறுகால பூசை, அதற்காக கட்டாய நிதி வசூல், பார்ப்பன அதிகாரிகளுக்கு முக்கியப் பதவி, எம்.எல்.ஏ. எம்.பி. சீட்டுகள், இந்திய ஈழத் தமிழன மக்கள் மீது தாக்குதல் போன்ற நடவடிக்கைகளுக்காக ஜெயலலிதா வை ஏற்றிப் போற்றினர். தமது அதிகாரத் துக்கான அடிப்படை ஆதாரமாக திராவிட வேடம், அதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி வீரமணி போன்ற "திராவிடக் கொழுந்துகளை இழுத்துப் போட்டு கொண்ட போது கூட ஜெயலலிதாவின் அரசியல் திறமையைப் பாராட்டினர். ஆனால் ஆலோசனையும், அதிகார நிர்வாகமும் முழுக்க தமது கட்டுப்பாட்டில் வந்துவிடும் என்று பார்ப்பன சாதியினர் எதிர்பார்த்தது நடக்கவில்லை.

ஜெயலலிதா அடிப்படையில் ஒரு பார்ப்பன பாசிஸ்டாக இருந்த போதும் ஆடரம்பர, உல்லாச, ஊதாரி வாழ்க்கையிலும் அதிகார மிதப்பிலும் சுய விளம்பரத்திலும் மூழ்கித் திளைப்பவராக உள்ளார். இதைப் பயன்படுத்திக் கொண்டு ஆளும் கட்சிக்குள் செங்கோட்டையன் - முத்துசாமி ஆகிய கவுண்டர் சாதியினர் ஒருபுறம், கண்ணப்பன் தலைமையில் யாதவர் முதலிய சிறுபான்மை சாதியினர் மறுபுறம், சசிகலா நடராஜன் - எஸ்.டி.எஸ். ஆகிய முக்குலத்தோர் இன்னொருபுறம் என்று அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். இதில் ஜெயலலிதாவிடம் உள்ள தனிப்பட்ட இரகசிய உறவு, சாதிபலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவரை ஆட்டுவிக்கும் சக்தியாக சசிகலா நடராஜன் கும்பல் உள்ளது.

இருந்தாலும் ஜெயலலிதா தனது தொப்புள் கொடியை முற்றாக அறுத்துக் கொள்ளவில்லை. பார்ப்பன சாதியினர் அனைவருமே ஜெயலலிதாவுக்கு எதிரணியில் சேர்ந்துவிடவும் இல்லை. மத்தியில் இன்னாள் அரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா, நரசிம்மராவ் முன்னாள் அரசுத் தலைவர் வெங்கடராமன், மூதிய வழக்கறிஞர், பராசரன், தேவகி மருத்துவமனை சொக்கலிங்கம், போலீசுத்துறை தலைவர் வைகுந்த், தினமலர் ராமசுப்பைய்யர் குடும்பம் போன்ற பலரும் இன்னமும் ஜெயலலிதாவின் பின்பலமாக உள்ளனர். இவர்களின் நோக்கம் சசிகலா நடராசன் அல்லது செங்கோட்டையன் - முத்து சாமி அல்லது கண்ணப்பன் போன்ற மற்ற சாதியினர் ஆதாயமும் செல்வாக்கும் செலுத்தினாலும், கிடைத்தவரை இலாபம் தான் என்று அவர்களுடன் சமரசம் செய்து கொண்டு தனக்குரிய பங்கைப் பெறுவதுதான். ஆனால் சு.சாமி, சோ, மற்றும் பிற பார்ப்பன கும்பலோ, பிறசாதி குறிப்பாக சசிகலா, நடராஜன், எஸ்.டி.எஸ். செல்வாக்கில் இருந்து ஜெயலலிதாவை மீட்பதற்கான போராட்டமே இப்போது நடத்து கின்றனர்.

"மகாமகம் படுகொலைகளில் இருந்து ஜெயா அரசின் பல அரசியல் பாசிச நடவடிக்கைகள், லஞ்ச ஊழல், கோயாபல்சு விளம்பரங்கள், அதிகார முறை கேடுகள், சொத்துக்கள் வாங்குவது, வெளி நாடுகளுக்கு பணம் கடத்துதல், இரகசிய உலகப் பேர்களிடம் கள்ள உறவு உட்பட அனைத்தும் ஜெயலலிதாவுககுத் தெரியாமல், அவரதுஅனுமதியில்லாமல் அவரை ஆட்டிப் படைக்கும் சசிகலா நடராஜன் கும்பலின் சதிச் செயல்கள் தாம்; ஜெயலலிதாவுக்குத் தெரியும்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com

# "தடா" தேவிக்கு கடா வெட்டும் வீரமணி!

இந்தியா முழுவதும் மொத்தம் 77,571 பேர் தடாவில் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். இதில் 2 சதவிகிதத்திற்கு உட்பட்டவர்கள் தான் குற்றவாளிகள் என தீர்மானித்து வழக்கில் சேர்த்திருக்கிறார்கள், நீதிபதிகள். எஞ்சிய 98% பேரும் தடா விசாரணைக் கைதிகள்தான். இதில் 90% பேர் அப்பாவி மக்களும், தடாவிற்குப் பொருத்தமில்லாத சிறு குற்றவாளிகளும், விடுதலைப் போராளிகளும் ஆவர். இதிலும் குஜராத், மஹாராஷ்டிரா, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், தமிழ்நாடு, டில்லியில் சிறுபான்மை மதத்தினர் கணிசமானோர் உள்ளனர்.

ஒரு குற்றவாளி மீது எந்த இந்திய குற்றவியல் சட்டங்களும் பிரயோகிக்க முடியாத நிலையிருக்கும் பொழுதுதான் தடாவை பிரயோகிக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு மாநில அரசாங்கங்களின், போலீசு அதிகாரிகளின் சுயநலம் - விருப்பு, வெறுப்புக்கு ஏற்பவே பிரயோகிக்கப்பட்டது. தமிழகத்தில் பாசிச ஜெயா கும்பல் தமது அரசியல் எதிரிகளை பழிவாங்க சகஜமாகப் பயன்படுத்தியது; பயன்படுத்தி வருகிறது. அரசுக்கு விரோதமாக எழுதினார், பேசினார், சிந்தித்தார் என்றும் மக்களை கலகத்திற்கு தூண்ட முயன்றார் பிரிவினைக்கு உதவ முயன்றார் என்றும் பலவாறாக காரணம் கூறி தடாவை பயன்படுத்துகிறது ஜெயா கும்பல். சுப்புலட்சுமி ஜகதீசன் முதல் பெருஞ்சித்திரனார் வரை பல உதாரணங்கள் இருக்கின்றன. அண்மையில் குணா என்பவரும் இதே போல் தடாவின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

எக்காரணமும் இல்லாமல் குணாவை கைது செய்ததும் சுப்பிரமணியசாமியை தடாவில் கைது செய்ய முயன்ற தில்லுமுல்லுகள் சந்திசிரித்தும் ஜெயாவின் பாசிச வெறிக்கு அண்மைக்கால சிறந்த உதாரணங்கள். ஆனால் இவை இரண்டிலும் தி.க. பொதுச்செயலாளர் கி. வீரமணியின் கைங்கர்யம், தூண்டுதல் இருப்பதாக வரும் செய்திகள் திராவிடக் கொழுந்துகளின் முகத்திரையையும் கிழித்துக் காட்டுகிறது. எல்லோரும் வியக்கும் வண்ணம் ஜெயா தனது பாசிச தன்மைகளை வெளிகாட்டுகிறார் என்றால் வீரமணி அப்பாசிச நாயகிக்கு பாதபூஜை செய்வதில் வெளிக்காட்டி முத்திரை பதிக்கிறார்.

சுப்ரமணியசாமியின் ஜெயாவுக்கு எதிரான வழக்குக்கு சென்னா ரெட்டி அனுமதி கொடுத்ததால் தமிழக அரசியலில் ஏற்பட்ட குழப்பம், நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஜெயா கும்பல் ஏதாவது செய்ய வேண்டியிருந்தது. அப்பொழுது திராவிடக் கொழுந்துகளாகிய நெடுமாறன், கி. வீரமணியும் வழங்கிய ஆலோசனைதான் சு.சாமியை கைது முயற்சி. சட்ட நுணுக்கங்களை கரைத்து குடித்த வீரமணியானது ஒரு நல்ல ஆலோசனை வழங்கியிருக்கக் கூடாதா; இப்படியா அவமானப்பட வேண்டும்? தேடிக் கொண்டிருந்த தடா கைதியான ரவி என்பவர் தி.க. வின் கையிலிருந்து (Custody) போலீசு கைக்கு மாற்றப்பட்டு, சுப்ரமணியசாமி அடைக்கலம் கொடுத்ததாக வாக்குமூலம் தயாரித்து, ரவியும் சாமியும் இணைந்த புகைப்படத்தை தயாரித்து வெளியிட்டு இறுதியில் எல்லாம் வெளிச்சமாகி பிசுபிசுத்து போய்விட்டது. இதில் வீரமணியின் பின்னணி பற்றி அனைத்து பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டும் இதுவரை தகுந்த மறுப்பு எதுவும் தி.க. தரப்பிலிருந்து இல்லை.

இதே போல் "திராவிடம் வீழ்ந்தது" என்ற புத்தகம் எழுதி வெளியிட்ட குணாவிற்கு வரிந்துகட்டி கொண்டு மறுப்பு கட்டுரை எழுதி வருகிறது. தி.க., விடுதலை. வீரமணியின் சந்தர்ப்பவாதத்தையும் துரோகத்தையும் அம்பலப்படுத்தி வருவோரின் பட்டியல் வளர்வதை விரும்பாத வீரமணி ஜெயாவுடன் உள்ள தற்போதைய நெருக்கத்தைப் பயன்படுத்தி குணா மீது தடாவை பிரயோகிக்கத் தூண்டியுள்ளார் என்று பேசப்படுகிறது. வீரமணியின் செய்கைகள் இதை நம்பும்படியே உள்ளன.

தடாவை ஆரம்ப நாட்களில் தீவிரமாக எதிர்த்து எதிரி மீதுகூட இது பிரயோகிக்கக் கூடாது என்று பேசியும் எழுதியும் வந்த தி.க. வீரமணி, இப்படி காட்டிக் கொடுப்பவராகவும், கூட்டிக் கொடுப்பவராகவும் இழிந்து போனது ஏன்? எல்லாம் பணமும், சொத்தும் செய்கிற மாயமோ? சுப்ரமணியசாமி ஒரு அமெரிக்கக் கைக்கூலி; பார்ப்பன சதிகாரர்; சகுணி, ஜனநாயக விரோதி; பொறுக்கி அரசியலிலும் விஷ ஜந்து என்றெல்லாம் சொல்லலாம். அதேபோல் குணா; ஒரு மார்க்சிய குழப்பவாதி; தமிழினவாதி; தன்னார்வ குழுவைச் சேர்ந்த துரோகி என்பது எமது நிலைப்பாடு. இதுவே தி.க.வின் நிலைப்பாடாக கூட இருக்கிறது என்று வைத்துக்கொண்டாலும் எதிரியையும் துரோகியையும் 'பழி தீர்ப்பதில்' ஒரு அரசியல் நேர்மை, நேருக்கு நேர் எதிர்கொள்ளும் வீரம், கருத்துக்களை மோதி உடைக்கும் துணிவு - தெளிவு வேண்டாமா?

தன்மானமும், பகுத்தறிவும் கொண்டவர்கள் எவரும் தி.க.வில் இல்லை என்று நம்பி ஒரு ஆலோசனையை முன் வைக்கிறோம். சுப்ரமணிய சாமி, குணா விஷயத்தில் இப்படி நடந்து கொள்ளலாமா என்று கேட்பவர்களின் வாயை அடைக்க கீழ்வருமாறு பதிலுரைக்கலாம்: "அடுத்து கெடுப்பது பார்ப்பனியத்தின் குணம். முன்பு தன்னை எதிர்ப்பவர்களையெல்லாம் இப்படியே வென்றது பார்ப்பனீயம். இது பார்ப்பனர்களுக்கே உரிய தனிப்பட்ட தகுதியா என்ன? இல்லை; சூத்திரனுக்கும் அடுத்துக் கெடுக்கத் தெரியும்; முடியும். பார்ப்பனீயத்துடன் கூடிக் குழாவியும் திராவிடம் வெற்றிக் கொள்ளும். எதிர்ப்பது மட்டுமே ஒரே வழியல்ல. ஜெயாவுடன் நட்பு பாராட்டியே தோலுரிக்கிறோம். சுப்ரமணியசாமி விசயத்தில் எக்குத்தப்பாக மாட்டிவிட்டோம். குணா விசயத்தில் தடா நாயகியின் கொடூரத்தை வெளிக் கொண்டு வந்துள்ளோம்."

இப்படிப்பட்ட பித்தலாட்டமான வாதம் தான் இனி வீரமணி கும்பலை நியாயப்படுத்த உதவும். ●





படிப்பகம்

www.padippakam.com

# நிரந்தரமாகிறது "தடா"

**தடா சட்ட விதிகளை உள்வாங்கிக் கொண்டு வந்துள்ள புதிய சட்ட மசோதா இந்திய குற்றவியல் சட்டங்களுள் ஒன்றாகிவிடும்.**

பயங்கரவாதிகளையும் பிரிவினை வாதிகளையும் ஒடுக்குவ்தற்காக கூடுதல் சிறப்பு சட்டமாக - தற்காலிக சட்டமாக 1987-ல் கொண்டு வரப்பட்டது, "தடா" (TADA). 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீட்டிக்கப்பட்டு வந்து இம்முறை அதை காலாவதியாகும்படி செய்து அதற்குப் பதிலாக புதிய சட்ட மசோதா ஒன்றை தாக்கல் செய்தது, காங்கிரசு கும்பல். தடாவில் உள்ள விதிகளை அப்படியே புதிய சட்டத்தில் வைத்துவிட்டு ஒரு சில மாற்றங்களை மட்டும் செய்து நாடகமாடி வருகிறார்கள். கொடிய ஒரு பாசிச மிருகத்திற்கு பெயர் மாற்றம் செய்தது மட்டுமல்லாமல் அதை நிரந்தமாக்கவே முயல்கிறார்கள். இந்திய நிரந்தர சட்டங்களுள் (Cr.PC) ஒரு பிரிவாகத்தான் புதிய குற்றவியல் சட்டதிருத்த மசோதாவை (Criminal law Amendment Bill) முன் வைத்து இருக்கிறார்கள். அதாவது தடாவை நிரந்தரமாக்கி, நிறுவனமயமாக்கி வருகிறார்கள்.

முக்கியமாக தடாவில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் சாதாரண உரிமைகளை எல்லாம் பறித்து ரகசிய முறை விசாரணை, தண்டனை என்று இருப்பதற்கும் அப்பாவிகள் மீது பிரயோகமாகி வருவதற்குமே கடுமையான கண்டனங்களை எதிர்கட்சிகள் முன் வைத்தன. தேச ஒற்றுமை, பாதுகாப்பு என்ற பெயரில் அப்பாவிகளையும் பயங்கரவாதிகளாக கைது செய்து சித்திரவதை செய்யப்பட்டதை நரசிம்மராவ் கூட ஒத்துக் கொண்டு மாற்றம் செய்யப் போவதாக உறுதியளித்தார். ஆனால் அப்படி எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

தடா கைதி, பிணையில் வெளிவருவதற்கு உச்சநீதிமன்றத்திற்குத்தான் அதுவும் குற்றம் சாட்டியவர் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்காதபொழுதுதான் மனு செய்ய முடியும். புதிய சட்டத்தில் கைது செய்யப்பட்டவர் உயர்நீதிமன்றத்திலேயே பிணை வாங்கலாம் என்ற மாற்றம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட பகுதியில் அனுமதியில்லாமல் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்தால் அவரை தடாவில் கைது செய்யலாம். தடாவில் கைது செய்யப்படுகிறவருடன் எந்த வகையான சிறு தொடர்பு வைத்துக் கொண்டிருந்தவரையும் தடாவில் கைது செய்யலாம். இந்த விதிகள் புதிய சட்டத்தில் இல்லையென்றாலும் குற்றவாளி என்று தீர்மானிப்பதற்கான மற்ற விதிகள் அனைத்தும் தடாவில் உள்ளவையே. பயங்கரவாதி மற்றும் நாட்டு ஒற்றுமை, பாதுகாப்புக்கு கேடு விளைவிப்பவர் என்பவைகளுக்கு தடாவில் உள்ள விளக்கம் தான் புதிய சட்டத்திலும் இருக்கின்றன.

ஒரு கீழ்மட்ட போலீசு அதிகாரி முடிவு செய்தாலே போதும் எவரையும் தடாவில் கைது செய்யலாம் என்பது புதிய சட்டத்தில் இல்லை. மேலும் மேல் மட்ட அதிகாரிகள்தான் விசாரணை நடத்த முடியும் இவர்களும் மிரட்டியதோ, தவறு செய்ததோ உறுதியானால் ஒரு வருடம் வரை சிறை தண்டனை அளிக்கலாம் என்பது புதிய சட்டத்தில் இருக்கிறது. எனினும் அரசு அதிகாரிகள் மீது அரசாங்க அனுமதியில்லாமல் எந்த தண்டனையும் விதித்து நடைமுறைப்படுத்த முடியாது என்கிற 197-வது பிரிவு இதன் குறுக்கே வந்து நிற்கிறது.

மேலும் போலீசு அதிகாரிகள், கைதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான நாட்களை, தடாவில் இருந்ததை விட ஒரு மடங்கு கூட்டிக் கொடுத்திருக்கிறது புதிய சட்டம். இதே போல் நீதிமன்ற காவலையும் ஒரு மடங்கு கூட்டியுள்ளனர். இது பொய் குற்றச்சாட்டுக்கும், இழுத்தடிப்புக்கும், மிரட்டலுக்கும் வழிவகுக்காது என்ற காரணத்திற்காக என்று குறிப்பிடுகிறார்கள்; வேடிக்கை தான்.

குற்றம் சாட்டப்பட்டவர்தான் தன்னை நிரபராதி என்று நிரூபிக்க வேண்டும் என்பதிலோ போலீசு தரப்பிலுள்ள ரகசிய சாட்சிகள் பற்றிய விதிகளோ எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. இதில் ஒரு அயோக்கியத்தனமான சிறிய மாற்றம் மட்டுமே செய்திருக்கிறார்கள். தடாவில் குற்றவாளிக்கு எதிரான போலீசு சாட்சிகளை நீதிமன்றத்தில் கொண்டு வருவதற்கோ, அவரைப் பற்றிய பெயர், முகவரி, அடையாளம், குறிப்புகளை வெளியிடுவதற்கோ அவசியமில்லை. ஆனால் புதிய சட்டத்திலோ இச்சாட்சிகளுக்கு எவ்வித ஆபத்தும் குற்றவாளியால் வராது என போலீசு ஒத்துக்கொண்டால் மட்டுமே நீதிமன்றத்தில் கொண்டு வரவும் அவரை குறுக்கு விசாரணை செய்யவும் அனுமதி உண்டு.

— இப்படி உப்புக்கும் உதவாத சில மாற்றங்களை செய்துவிட்டு தடாவை ஒழித்துவிட்டோம் என்று கூச்சல் போடுகிறார்கள் ஆட்சியாளர்கள். இந்த சட்டத் திருத்த மசோதாவிற்கு இரு அவைகளிலும் எதிர்ப்பு தெரிவித்த எதிர்கட்சிகள் (பா.ஜ.க., அ.தி.மு.க., தவிர) மேலும் சில கூடுதலான திருத்தங்களைத்தான், விளக்கங்களைத்தான் கோருகிறார்களே ஒழிய புதிய சட்டமே தேவையில்லை என்று உறுதியாக எதிர்த்து நிற்கவில்லை; பழைய சட்டங்களே போதுமானது என்று சிலர் குரல் கொடுத்ததோடு சரி. இவர்கள் கோரிய சிறு திருத்தங்களையும் காங்கிரசு ஏற்றுக்கொண்டு விடுமானால் மெல்ல அடங்கிப் போய்விடுவார்கள் என்றே தெரிகிறது.

ஆனால் தடாவுக்குப் பதிலாக என்று வந்துள்ள இப்புதிய தடா சட்டம் இந்தியக் குற்றவியலின் சாதாரண ஒரு சட்டமாக்கப்படுகிற அபாயத்தை எவரும் உணர்ந்தாரில்லை; இப்புதிய சட்டம் 5 ஆண்டுக்கு ஒருமுறை பரீசிலிக்கப்பட வேண்டும் என்று தடாவைக்காட்டிலும் காலவரம்பு கூட்டியது காலப்போக்கில் அதையும் எடுத்து நிரந்தரமாக்குவதற்கான முகாந்தரமே. அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக, முயன்றதாக 124-ஏ என்ற சட்டம் எப்படி தற்போது சகஜமாக பிரயோகிக்கப்படுகிறதோ அதுபோல் "பயங்கரவாதி, பிரிவினைவாதி" என்று கூறி இப்புதிய சட்டமும் சாதாரண - பரவலான நடைமுறைக்கு வந்துவிடும். அப்பாவிகள் மீதுள்ள தவறான பிரயோகத்தை தடுப்பதற்குப் பதிலாக அதை சாதாரண குற்றவியல் நடைமுறைக்கிணையாக பரவலாக பிரயோகிப்பதற்

தடாவிற்கு மாற்றமில்லாத புதிய சட்டத்திற்கு எதிராக டில்லியில் போராட்டம்





படிப்பகம்

www.padippakam.com



## பெருஞ்சித்தரனாருக்கு அஞ்சலி

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தலைவரும், ''தென்மொழி'' பத்திரிகை ஆசிரியருமான தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் (63) அவர்கள் 11.6.95 அன்று மரணமடைந்தார். தமிழுக்காக, தமிழனுக்காகப் போராடுபவர்களாக காட்டிக் கொள்ளும் பீற்றிக் கொள்ளும் கருணாநிதி, வீரமணி, நெடுமாறன் போன்ற பிழைப்புவாதிகளைப் போல் - தமிழினத் துரோகிகளைப் போல் அல்லாமல் உண்மையில் இறுதி மூச்சுள்ளவரை போராடினார், பெருஞ்சித்திரனார். 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் அண்மையில் தஞ்சையில் நடந்த 8-வது உலகத் தமிழ்மாநாட்டிற்கு எதிரான போராட்டம் வரை இன மொழி உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்த போராளிகளில் முன்னணியாகத் திகழ்ந்தவர். இதுவரை மிசா, என்.எஸ்.ஏ., தடா போன்ற கொடிய சட்டங்களை தமிழக - மத்திய ஆட்சியாளர்கள் இவர்மீது பிரயோகித்துள்ளார்கள். கனத்த நெஞ்சுடன் அவருக்கு அஞ்சலியும், வீரவணக்கமும் செலுத்துகிறோம்.

தமிழறிஞர் பெருஞ்சித்திரனாருடைய கொள்கை, அரசியல் வழி, அணுகுமுறைகளில் எமக்கு மாறுபட்ட கருத்து உள்ளதெனினும் இன, மொழி ஒடுக்குமுறைகளுக்கு எதிரான அவரது ஜனநாயகப் பணிகளை மதிக்கிறோம்; அவருடைய மரணம் தமிழுக்கும், தமிழினத்திற்கும் பேரிழப்பு என்று உணர்கிறோம்.

**ஆசிரியர் குழு**

குத்தான் புதிய சட்டம் வழிவகுக்கிறது.

இதுவல்லாமல் தடாவில் கைது செய்யப்பட்டுள்ள அப்பாவிகள் விடுதலையாவதற்கு புதிய சட்டத்தில் வழி இல்லை. ஏனெனில் தடாவில் கைது செய்யப்பட்டவர்கள் குற்றம் செய்ததாக நிரூபிக்கப்பட்டவர்களாகி விடுகிறார்கள் என்றும் இச்சட்டம் காலாவதியானாலும் இவர்கள் மீதான விசாரணையோ, நடவடிக்கையோ எதுவும் பாதிக்காது; தொடரும் என்றும் ஒரு (பிரிவு 1 (4) தடாவில் உள்ளது. தடா சட்டம் காலாவதியானதைச் சுட்டிக்காட்டி வழக்கு விசாரணையை நிறுத்தும் படி கோரிய வழக்கறிஞர்களுக்கு தடாசிறப்பு நீதிபதிகள் கொடுத்த பதில் இது. எனவே புதிய சட்டம் எதுவும் போடாமல் இருந்தால் கூட தடா கைதிகள் வெளிவருவதற்கான வழிமுறையோ, உத்தரவாதமோ இல்லை; சம்பந்தபட்ட நீதிபதிகளோ, சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கமோ (என்.டி. ராமாராவ் போன்று) விடுதலை செய்தால்தான் உண்டு என்ற நிலையே நீடிக்கிறது.

மேலும் ராஜீவ் கொலை வழக்கிலும், பம்பாய் குண்டு வெடிப்பு வழக்கிலும் கைதானவர்களை தப்பிக்கவிடத்தான் (பிணை வரம்பு மாற்றத்தைக் குறிப்பிடுகிறார்கள்) புதிய சட்டம் பயன்படும் என்று கூறி பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் கூச்சலிடுகின்றன. இவ்வழக்குகளின் கைதிகளுக்கு மட்டும் சிறப்பான சட்ட விதிமுறை (அதாவது கடுமையான விதிமுறை) உருவாக்கலாமா எனவும் மத்திய ஆட்சியாளர்கள் யோசித்து வருகிறார்கள். தடாவில் கைதான அப்பாவிகளும் முஸ்லீம்களும் விடுதலையாக முடியாததையே இவை காட்டுகின்றன.

ஆனால் தடா காலாவதியானதால், புதிய சட்ட 'நலன்களால்' பாதிக்கப்பட்ட சிறுபான்மை முஸ்லீம் மக்கள் பயன்பெறுவார்கள் என்ற மாயையை தோற்றுவித்து ஓட்டு ஆதாயம் தேடுகிறது, காங்கிரசு கும்பல். காங்கிரசின் இடைக்கால தேர்தல் தோல்விகள் (கர்நாடகம், மஹாராஷ்டிரம், குஜராத், தோல்விகள்) ஏற்படுத்தியுள்ள நெருக்கடி காரணமாக இழந்த முஸ்லீம்கள் ஓட்டுகளை கவர முனைகிறது. இதற்காகத்தான் புதிய சட்டத்தையும் கூட எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை கணக்கில் வைத்து உடனடியாக நிறைவேற்றாலும், எதிர்தரப்பினரின் திருத்தக் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலிப்பதுபோல் வளைந்து கொடுத்தும் காலத்தை கடத்திக் கொண்டிருக்கிறது. மேலும் முஸ்லீம் மத தலைவர்களிடமிருந்து வந்துள்ள எதிர்ப்பும், வரவேற்பின்மையும் காங்கிரசு கும்பலின் தாமதத்திற்கு காரணமாக இருக்கிறதே ஒழிய புதிய பாசிச சட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்தவே காத்திருக்கிறது. பாசிச சட்டங்களை, அதன் தன்மைகளை குறைப்பதற்கு காங்கிரசுக்கு வேறு எந்த நெருக்கடியும் பெரிய அளவிற்கு ஏற்பட்டுவிட வில்லை; மாறாக பாசிசத்தன்மைகளையும், சட்டங்களையும் கூட்டுவதற்கான நெருக்கடிதான் ஆளும் வர்க்கங்கள் மத்தியில் நிலவிக் கொண்டுள்ளது. மிசா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு அம்பலமானதும், எதிர்ப்பு வந்ததும் மினிமிசா என்று மாற்றியது, அன்றைய காங்கிரசு. இதுபோல் ஒவ்வொரு பாசிச சட்டமும் அம்பலமானதும் புதிது புதிதாக அதே சட்டங்களை திணிப்பதை ஆளுங் கும்பல் கைவிடாது. தடாவிற்கு பெயர்மாற்றம் செய்கிற மாயாஜால வித்தைகள் மூலமாக உயிர் போய் கொண்டிருக்கும் காங்கிரசை காப்பாற்றி விட முடியுமா என்ன?

● சுப்பு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரங்களில் எல்லாம் அவர் கண்டித்துத் தடுக்கவே முயலுகிறார், அதையும் மீறி சக்தி வாய்ந்த அச்சதிகாரகும்பல் குற்றங்கள் புரிந்து வருகின்றன.'' இந்த அடிப்படையில் தான் துக்ளக், விகடன், தினமணி போன்ற எல்லா பார்ப்பன ஏடுகளும் தாக்குதல் தொடுக்கின்றன. எப்போதும் நடுநிலை நாடகமாடி வந்த தினமணி இப்போது வரிந்து கட்டிக் கொண்டு சசிகலா விவகாரங்களை அம்பலப்படுத்துவதில் இறங்கியுள்ளது.

அதுவுமல்லாமல், அரசியல் பாசிச ரௌடித்தனம், கோயாபல்சு விளம்பரம், லஞ்ச ஊழல், அதிகார முறை கேடுகள், இரகசிய உலகத்துடனான கள்ளக்கூட்டு, ஆபாச வக்கிர அரசியல் கோமாளித்தனங்களில் இனிமேலும் நியாயப்படுத்த முடியாத கடைகோடி எல்லையையும் ஜெயா கும்பல் தாண்டி விட்டது. மக்கள் மத்தியில் அது முழுக்கவும் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுள்ள நிலையில், தமது சாதி முழுவதும் அதோடு இனங்காட்டிக் கொண்டு இழிவுபட வேண்டியதில்லை என்று பார்ப்பன சாதியின் பெரும்பான்மையோர் எண்ணுகின்றனர். ''மூழ்கிவிடும்'என்று சந்தேகிக்கப்படும் கப்பலில் இருந்து கொண்டு இனிமேலும் என்ன பயன்? அதற்குக் கடலிலேயே குதித்து விடலாமா?'' என்கிற கவலை அவர்களைப் பிடித்துக் கொண்டு விட்டது.

சு.சாமி, சோ. ராமசாமி போன்ற பார்ப்பனர்கள் எப்படி சசிகலா நடராஜன் கும்பலிடமிருந்து ஜெயலலிதாவைமீட்பது என்கிற போராட்டத்தில் இருப்பதைப் போலவே, அதைத் தடுப்பது, வெங்கட்ராமன் முதலிய இன்னொரு பிரிவு பார்ப்பனக் கும்பலிடமிருந்து ஜெயலலிதாவை மீட்பது, சசிகலா நடராஜன் பிடியை உறுதி செய்வது என்கிற திராவிடத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் வீரமணி, நெடுமாறன் ஆகியோர். எப்படியோ ஜெயலலிதா நலன்களைப் பாதுகாப்பதில் இவர்களுக்குள் வேறுபாடே கிடையாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அதிகாரத்திலிருக்கும் பார்ப்பன பிரதிநிதிகளாக உள்ள நரசிம்ம ராவ், சங்கர் தயாள் சர்மா, ஆர். வெங்கட்ராமன் மூலம் சங்கராச்சாரிகள், டி.என். சேஷன், ராமகிருஷ்ண ஹெக்டே, பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி - பிராமணர் சங்கம், சி.பி.எம். போலிக் கம்யூனிஸ்டுகள் ஆகியோர் இன்னமும் ஜெயலலிதாவின் பக்கபலமாக உள்ளனர். ''அந்தப் பார்ப்பாத்திக்கு எதிராக பார்ப்பன சாதியின் ஒரு பிரிவினர் நடத்துவதும் கூட'' நிழல் சண்டைதான். நிஜச்சண்டையல்ல.

◆ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

## தொடரும் மசூதி அழிப்பு

# அயோத்தியில் ராமவெறியர்கள் காஷ்மீரில் ராணுவ வெறியர்கள்

**சரார் - இ - ஷெரீப் மசூதியை எரித்து ராணுவ பயங்கரவாதத்தை மறைக்க தீவிரவாதிகள் பிரச்சினை ஒரு சாக்கு.**

சரார் - இ - ஷெரீப்பிலுள்ள தொன்மை வாய்ந்த வழிபாட்டுத் தலம் தீக்கிரையாக்கப்பட்ட கொடிய சம்பவமானது, காஷ்மீர் பள்ளத்தாக்கில் கொந்தளிப்பை ஏற்படுத்தியதோடு, இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள முஸ்லீம்களின் நெஞ்சில் ஆறாத ரணத்தை ஏற்படுத்தியுள்ளது. இக்கொடுஞ்செயலின் மூலம் இந்திய அரசு பயங்கரவாதிகள் காஷ்மீர் மக்களிடம் மட்டுமல்ல, உலக அரங்கிலும் மேலும் அம்பலப்பட்டுத் தனிமைப்பட்டுப் போயுள்ளார்கள்.

### மசூதியைக் கொளுத்தியது யார்?

காஷ்மீரின் தலைநகரான சிறீநகரிலிருந்து தென்மேற்காக 30 கி.மீ. தொலைவிலுள்ளது சரார் நகரம். இங்குள்ள ஷேக் நூருதீன் நூரானி எனும் மசூதியானது 600 ஆண்டுகால தொன்மை வாய்ந்தது. சரார் நகரம், பாக் ஆதரவு பெற்ற ஹிஸ்புல் முஜாகிதீன் போராளிகளின் புகலிடமாக இருந்தது. இந்திய ராணுவத்தின் தேடுதல் வேட்டை காரணமாக போராளிகளில் சிலர் இம்மசூதியில் தஞ்சமடைந்தனர். ''இத்தீவிரவாதிகளுடன் பாகிஸ்தான், ஆப்கான் நாட்டுத் தீவிரவாதிகளும் இம்மசூதியினுள் தங்கிக் கொண்டு நாசவேலையில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை வெளியேற்ற வேண்டும்'' என்று கூறிக் கொண்டு இந்திய ராணுவம் கடந்த மார்ச் 8-ம் தேதியிலிருந்து சரார் - இ - ஷெரீப் நகரை முற்றுகையிட்டு ஆக்கிரமித்துக் கொண்டது. நகரின் குடிநீர் மற்றும் மின்சார இணைப்புகளைத் துண்டித்தும், மசூதி அருகே குண்டு வெடிப்புகளை நடத்தி மக்களை பயபீதியூட்டி கட்டாயமாக வெளியேற்றியும் குடியிருப்புப் பகுதிகளையே தனது முகாம்களாக மாற்றிக் கொண்டது.

இந்நிலையில் ஹரியத் அமைப்பின் தலைவர்கள், ஏப்ரல் 5-ம் நாளன்று முற்றுகையை நீக்கக் கோரி சரார் நகரை நோக்கி மாபெரும் பேரணியை நடத்தியபோது அவர்கள் சனாபோரா நகர் அருகே வழி மறிக்கப்பட்டு இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். காஷ்மீரில் இந்திய ராணுவத்தின் முற்றுகை நடவடிக்கையும், 20,000க்கும் மேற்பட்ட சரார் நகர மக்களை கட்டாயமாக வெளியேற்றதும் அனைத்துலக பத்திரிகைகளிலும் நாறத் தொடங்கியது. இதனால் ஆத்திரமடைந்த ராணுவம் சரார் நகருக்குள் யாரும் நுழைவதற்குத் தடை விதித்தும், இந்திய பத்திரிகைகளைக் கூட நகரத்திலிருந்து வெளியேற்றி இரும்புத்திரை போட்டது. சரார் நகரில் என்ன நடக்கிறது என்பதை காஷ்மீர் மக்கள் கூட அறிந்து கொள்ள முடியாத அடக்குமுறையே அங்கு நீடித்தது.

மசூதியோடு நகரமும் அழிந்தது; வீடுவாசல்களை இழந்தவர்கள்.



இவ்வளவுக்குப் பின்னரும் மசூதியினுள் தஞ்சமடைந்த போராளிகள் சரணடைய மறுத்து விட்டனர். இதனால் ஏற்பட்ட ஆத்திரம், 'இரு மாதங்களுக்கும் மேலாகத் தொடரும் முற்றுகை' போரினால் ஏற்பட்ட விரக்தி, முன்பு ஹஸ்ரத்பால் மசூதியை முற்றுகையிட்ட போது நேர்ந்த தோல்வியும் அவமானமும் இப்போது நடந்து விடக்கூடாது என்கிற வெறி - எல்லாமும் சேர்ந்து கொள்ள சரார் நகர்க் குடியிருப்புகளை மே 8-ந் தேதியன்று இந்திய ராணுவம் தீயிட்டுக் கொளுத்தியது. முற்றுகையை உடைத்து தப்பியோடுவதற்காக வீடுகளுக்குத் தீ வைத்துவிட்டார்கள் என்று போராளிகள் மீது பழி சுமத்தியது. அதன் பிறகும் போராளிகள் சரணடைய மறுத்ததால், மே 10-ந் தேதியன்று நள்ளிரவில் ஹெலிகாப்டர் மூலம் ஒருவகை ரசாயனப் பொடியை மசூதி மீது தூவிய இந்திய ராணுவம், அதைத் தொடர்ந்து மசூதி மீது குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது. எளிதில் தீப்பற்றக் கூடிய இந்த ரசாயனப் பொடியின் விளைவால், மசூதி பற்றி எரிந்தது. அதன் பிறகுகூட இந்திய ராணுவம் தீயை அணைக்க முயற்சிக்கவில்லை. ஆக்கிரமிப்பு படைகளுக்கே உரிய பழிவாங்கும் வெறியே அதனிடம் பொங்கி வழிந்தது.

பத்தானியர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட இப்புனிதத் தலமானது காஷ்மீரிகளின் மத நல்லிணக்க அடையாளச் சின்னமாகும். இந்து - முஸ்லீம் உள்ளிட்டு அனைத்து காஷ்மீரிகளும் மதமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு அதைத் தமது பாரம்பரிய கலைச் செல்வமாக மதித்து வருகின்றனர். முகம்மது நபியின் தூதுவர்களில் ஒருவரான ஷேக் நூருதீன் நூரானி மற்றும் அவரது 11 சீடர்கள் பயன்படுத்திய உடமைகளும், நபிகளாரின் மகள் பாத்திமாவின் உடமைகளும் இப்புனித தலத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதாக முஸ்லீம்கள் இங்கு வழிபட்டு வருகின்றனர். அழகிய மர வேலைப்பாடுகள் மிக்க வரலாற்றுப் பொக்கிஷமான இப்புனிதத் தலம் இன்று சாம்பல் மேடாகிக் கிடக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

### இராணுவத்தின் சதிகள் - பொய்கள்

''சரார் நகருக்கும் மசூதிக்கும் தீவிர வாதிகள் தான் தீ வைத்தார்கள். ஹிஸ்புல் இயக்கத்தைச் சேர்ந்த இத் தீவிரவாதிகள் பாகிஸ்தானின் கைக்கூலிகள். மசூதியை ராணுவம் முற்றகையிட்ட போது இவர்கள் பாக்.உளவு அமைப்புக்கு ''ஒயர்லெஸ்'' மூலம் செய்தி அனுப்பினார்கள். தீ வைப்புக் கொடுஞ்செயலுக்கு தலைமையேற்றவன் மஸ்த்கல் எனும் தீவிரவாதி. ஆப்கானிலிருந்து தப்பி வந்த இவனை பாக். உளவு அமைப்பினர் காஷ்மீருக்கு அனுப்பி வைத்துள்ளனர்'' என்று இந்திய ராணுவம் கதை பரப்பியது. தப்பியோடிய போது பிடிபட்ட அபுஜிந்தால் என்பவனைக் காட்டி, அவன் பெயரால் ஒரு வாக்குமூல அறிக்கையைத் தயாரித்து மசூதியைக் கொளுத்தியது தீவிரவாதிகள்தான் என்று நம்பச் சொன்னது. இந்த அண்டப் புளுகை இந்திய 'தேசியப்' பத்திரிகைகளும் அப்படியே வாந்தி எடுத்தன.

ஆனால் சரார் மக்கள் அளித்த பேட்டிகள் - சாட்சிகளை மேற்குலகச் செய்தி நிறுவனங்கள் வெளியிடத் தொடங்கியதும் இந்திய அரசு பயங்கரவாதிகளின் சதிகள் அம்பலமாகியது. அதைவிட இந்திய ராணுவம் முன்னுக்குப்பின் முரணாக அளித்த அறிக்கைகளும் தர்க்க ரீதியாகக் கூட நியாயப்படுத்த முடியாத அதன் வாதங்களுமே அதன் மோசடி பித்தலாட்டங்களை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

இதுவொருபுறமிருக்கல மே-13 அன்று மசூதி அருகே 29 தீவிரவாதிகளின் சடலங்களைக் கண்டெடுத்ததாக ராணுவம் கூறியது. பின்னர் அது 14 பேர் தான் என்றது. அவர்கள் உடலில் குண்டுக்காயங்கள் இருந்தனவே தவிர, தீயில் சிக்கி மாண்டதற்கு ஆதாரமாக உடல் கருகி இருக்கவில்லை. மேலும் இவர்களில் 5 பேரை தமது உறவினர்கள் என்றும் தீவிரவாதிகளல்ல என்றும் சரார் மக்களே சாட்சியமளித்துள்ளனர். மேலும், மசூதிக்கு தீவிரவாதிகள் தீ வைத்தது உண்மையானால், அவர்கள் தப்பியோடாமல் ராணுவத்தினரின் கூற்றுப்படி, அவர்கள் ஏன் தீயில் கருகிச் சாக வேண்டும்? என்று சர்வகட்சி தூதுக் குழுவிடம் சரார் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். நேற்று வரை தீவிரவாதிகள்தான் மசூதிக்குத் தீவைத்தார்கள் என்று வாந்தியெடுத்த 'தேசிய' பத்திரிகைகள், இராணுவத்தின் கொடுஞ்செயல் அம்பலமானதும் இப்போது இருதரப்புக்குமிடையிலான துப்பாக்கிச் சண்டையில் மசூதி தீப்பற்றிக் கொண்டதாக மழுப்புகின்றன.

### மோசடித் தேர்தல் நடத்த முனைப்பு

சரார் மசூதி எரிந்து சாம்பலாகி அதன் நெருப்பு அணைவதற்குள்ளாகவே காஷ்மீரில் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ராவ் அரசு இறங்கியது. காஷ்மீரில் 'குடியரசு'த் தலைவர் ஆட்சி ஜூலை மாதத்தில் முடிவுக்கு வருவதால் அங்கு போலி ஜனநாயக மோசடித் தேர்தலை நடத்தி பொம்மையாட்சியை நிறுவி ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டதாக நாட்டையும் மக்களையும் ஏய்க்க அது தீவிரம் காட்டியது. காஷ்மீரில் தொடரும் மனித உரிமை மீறல் அட்டூழியங்களைச் சாதகமாக்கிக் கொண்டு மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் இந்தியாவுக்குக் கொடுத்துவரும் நெருக்கடியைச் சமாளிக்கவும், ஜனநாயக நாடகமாடி ஏகாதிபத்திய எஜமானர்களைத் திருப்திபடுத்தவும் இப்படியொரு மோசடித் தேர்தலை நடத்துவது இந்திய ஆட்சியாளர்களுக்கு அவசியமாக உள்ளது.

எரியும் தீயில் எண்ணெய் ஊற்றிய கதையாக, மசூதி எரிப்பைத் தொடர்ந்து தேர்தல் ஏற்பாடுகள் நடப்பதைக் கண்டதும் ஹாரியத் தலைவர்கள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு காஷ்மீர் மக்களுக்கு

> தீவிரவாதிகள்தான் மசூதிக்குத் தீ வைத்தார்கள் என்று வாந்தியெடுத்த 'தேசிய' பத்திரிகைகள், இராணுவத்தின் கொடுஞ்செயல் அம்பலமானதும் இருதரப்புக்கும் இடையிலான சண்டையில் தீ பற்றிக் கொண்டதாக மழுப்புகின்றன.

அறைகூவல் விடுத்தனர். தேர்தலைப் புறக்கணிக்குமாறும், மீண்டும் மசூதியைக் கட்டியமைக்க நிதியளிக்குமாறும் இவர்கள் வீடுவீடாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இந்நிலையில் கடந்த மே-23-ம் நாளன்று சரார் நகருக்குச் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறி தேர்தலுக்கு ஆதரவு திரட்ட முயன்ற மாநில காங்கிரசுத் தலைவரான குலாம் ரசூல் கார், மக்களிடம் உதைபட்டு ரத்தக்காயங்களுடன் தப்பியோடினார். ''உனக்கு இவ்வளவு தைரியம் வந்துவிட்டதா? துரோகியே ஓடிப்போ!'' என்று மக்கள் அவர் மீது கல்லெறிந்து விரட்டியடித்தனர். சரார் நகர் மட்டுமல்ல, அவரது சொந்த ஊரான சோப்பூரில் கூட மக்கள் அவரைக் ''கெரோ'' செய்து விரட்டினர். மாநிலத்தின் பல இடங்களில் வாக்குச் சாவடிகளாகப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட அரசுக் கட்டிடங்களை மக்கள் தீயிட்டுக் கொளுத்தி தமது வெறுப்பை வெளிப்படுத்தினர். காஷ்மீர் மக்களின் வெறுப்பையும் ஆத்திரத்தையும் கண்டு பீதியடைந்த 'தேசிய' ஓட்டுக் கட்சிகள் அனைத்தும், இப்போது காஷ்மீரில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்ற அலறின. ஆனாலும் இந்து வெறி பாரதீய ஜனதாவும், காங்கிரசு துரோகிகளும் எப்பாடுபட்டேனும் தேர்தலை நடத்தியே தீர வேண்டும் என்று எகிறிக் குதித்தனர்.

இந்நிலையில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலையை மதிப்பீடு செய்வதற்காக தலைமை தேர்தல் கமிஷனரான சேஷன், மே 27-ந் தேதியன்று காஷ்மீருக்குச் சென்றார். அன்ற சேஷனையும், அவரது தேர்தல் திணிப்பு நடவடிக்கைகளையும் எதிர்த்து மாநிலம் முழுவதும் கடையடைப்புப் போராட்டம் நடந்தது. அதைத் தொடர்ந்து, எப்படியும் தேர்தல் நடத்த வேண்டும் என்ற வெறியோடு மாநிலத்திலுள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்து அவசரக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார் மாநில ஆளுநர் கிருஷ்ணாராவ். ஆனால் அக்கூட்டத்துக்கு ஒரு சில அதிகாரிகள் மட்டுமே வந்தனர். பெரும்பாலோர் அக்கூட்டத்தைப் புறக்கணித்தனர். அதன் பிறகு பள்ளி ஆசிரியர்களை தேர்தல் பணியாற்றக் கோரி ஆளுநர் மேற்கொண்ட முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இந்நிலைமைகளைக் காரணங் காட்டி மீண்டும் 'குடியரசு'த் தலைவர் ஆட்சியை சர்வகட்சி ஆதரவுடன் ராவ் கும்பல் திணித்துள்ளது. இருப்பினும், முதல்கட்டமாக இந்துக்கள் நிறைந்துள்ள ஜம்முவிலும் புத்தமதச் சிறுபான்மையினரைக் கொண்ட லடாக்கிலும் பின்னர் காஷ்மீர் பிராந்தியத்திலும் எப்படியாவது அசாம் - பஞ்சாப் பாணியில் மோசடித் தேர்தலை நடத்தி பொம்மையாட்சியை நிறுவ முயற்சித்து வருகிறது.

ஆனால், இந்திய அரச பயங்கரவாதிகளின் சூழ்ச்சிகள் - சதிகளுக்கு காஷ்மீர் மக்கள் பலியாகத் தயாராக இல்லை. தமது வீடுவாசல், உடமைகளை இழந்து சரார் நகர மக்கள் பரிதவித்த போதிலும், மாநிலம் முழுவதும் ஊரடங்கு உத்திரவு போடப்பட்டிருப்பினும் தடையை மீறி தன்னெழுச்சியாக காஷ்மீரி மக்கள் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்கிறார்கள். கடுமையான அடக்குமுறை நிலவிய போதிலும் சுயநிர்ணய உரிமைப் போரில் அவர்களது உறுதி குலையவில்லை.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# புற்றீசலாய் பெருகும் ஹர்சத் மேத்தாக்கள்

**தாராளமயமாக்கலுக்குப் பின் பங்குச் சந்தை சூதாட்ட கும்பலின், தொழில் நிறுவனங்களின் மோசடிகள் பெருகி கட்டுப்படுத்த முடியாதென நிரூபிக்கின்றன.**

தாராள மயமாக்கிலின் முன் பெரு நகரங்களிலும் மாநிலத் தலைநகர்களிலும் மட்டுமே இருந்த பங்கு சந்தை விற்பனை மையங்கள், இன்று ஓரளவு வளர்ந்துள்ள தொழில் மற்றும் வணிக நகர்களிலும் தனது கிளைகளையும் விற்பனை நிலையங்களையும் அமைக்கத் தொடங்கியுள்ளன. இதோடு தனியாரும் பங்கு சந்தை நிறுவனங்களை அமைக்கத் தொடங்கியுள்ளனர். இதன் முன்பு வரை பங்குகளை வாங்குவதிலும் விற்பதிலும் முக்கிய பங்காற்றிய தனிப்பட்ட தரகர்களின் இடத்தை இன்று முதலீட்டு நிறுவனங்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

அரசு வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் கீழ் இயங்கும் முதலீட்டு நிறுவனங்கள், ஓய்வு பெற்ற வங்கி அதிகாரிகள் - பொருளாதார நிபுணர்களால் தொடங்கி நடத்தப்படும் முதலீட்டு நிறுவனங்கள், இவற்றோடு நூற்றுக்கும் மேற்பட்ட அந்நிய முதலீட்டு நிறுவனங்களும் நாட்டின் பங்கு மூலதனச் சந்தையை வட்டமிடத் தொடங்கியுள்ளன.

மார்கன் ஸ்டான்லி எனும் அமெரிக்க பரஸ்பர நிதி நிறுவனம் இந்தியாவில் நுழைந்த முதல் மூன்று நாட்களுக்குள்ளாகவே 1000 கோடி ரூபாயை மூலதனமாகத் திரட்டியது. நாட்டின் மூலையில் இருக்கும் அற்ப சேமிப்பாளர்கள் கூட, ''நிதி நிறுவனங்கள் மூலம் பங்குகளில் முதலீடு செய்வதுதான் இலாபம் தரத்தக்கது'' என்ற வகையில் தொடர்ச்சியாக மூளைச் சலவை செய்யப்படுவதுதான் இதன் அடிப்படை.

அந்நிய முதலீட்டு மற்றும் பரஸ்பர நிதி நிறுவனங்கள் இந்தியாவினுள் நுழைந்த இரு வருடங்களுக்குள்ளாகவே கிட்டத்தட்ட 40000 கோடி ரூபாயை இச்சூதாட்டத்தில் கொட்டின. இதன் காரணமாக பம்பாய் பங்கு சந்தை குறியீட்டு எண், அர்சத் மேத்தா ஊழல் விவகாரம் நடந்தபொழுது இருந்த நிலையையும் தாண்டி கிடுகிடுவென உயர்ந்தது. ''இந்த உயர்வுக்குப் பதுக்கலும் கள்ளப் பணமும் தான் காரணம்'' எனக் குற்றஞ் சாட்டினர், பங்கு-பத்திர பரிமாற்ற வாரியத்தின் முன்னாள் தலைவர் ஜி.வி. இராமகிருஷ்ணா. 94-ஆம் ஆண்டு இறுதிக்குள் மேலும் 12000 கோடி ரூபாய் அளவிற்குத் தங்களது பங்கு முதலீட்டை அதிகரிக்கப் போவதெனவும் இந்நிறுவனங்கள் அறிவித்தன.

இப்படி பங்கு மூலதனச் சந்தை பலூன் போல வீங்கி வருவதைத் தான் ''வளர்ச்சி'' என மாய்ந்து மாய்ந்து எழுதுகிறது தரகுக் கும்பல். ஆனால் இதே 'வளர்ச்சி' காலத்தில் தொழிற்துறையில் நேரடியாக முதலீடு செய்யப்பட்டுள்ள அந்நிய மூலதனம் 25,000 கோடி ரூபாய் தான், பங்கு சந்தையில் கொட்டப்படும் இம் மூலதனம் நேரடியாக சரக்கு உற்பத்தியிலோ பரிமாற்றத்திலோ ஈடுபடாது; புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்குவதில்லை. மாறாக, தங்கள் நிதி ஆதாரங்களைக் கொண்டு சந்தையில் போலியான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, கையளவேயான தரகர்களும் நிதி நிறுவன அதிபர்களும் - அதிகாரிகளும் கொள்ளையடிக்கத்தான் உதவும்.

சமீபத்தில் அம்பலமான எம்.எஸ். ஷூஸ் பங்கு மோசடி விவகாரத்திலும் இதுதான் நடந்தது. ''சாரீன் அண்ட் கோ'' எனும் முதலீட்டு நிறுவனம், எம்.எஸ். ஷூஸ் நிறுவன பங்குகளை அதன் அதிபர் பவன் சச்தேவாவின் தூண்டுதலால் ஒரே சமயத்தில் 16 கோடிக்கும் அதிகமாக வாங்கியது. இதன் காரணமாக அப்பங்குகளின் சந்தை மதிப்பு 268 ரூபாயில் இருந்து 414 ரூபாயாக உயர்ந்தது ''இவ்வுயர்வினைப் பயன்படுத்திக் கொண்டு, 468 கோடி ரூபாய் அளவிற்கு பங்கு சந்தையில் மூலதனத்தைத் திரட்டி மோசடியில் ஈடுபட்டுள்ளார்'' எனும் குற்றச்சாட்டின் பேரில் பவன் சச்தேவா தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ளார். தெரிந்தே இம்மோசடிகளை அனுமதித்ததற்காக பங்கு பத்திர பரிமாற்ற வாரியத்தின் (செ.பி) தலைமை இயக்குநர் எம்.டி. படேல், மற்றும் இந்திய அரசு வங்கியின் (SBI) முதலீட்டு நிறுவனத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளின் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஒரு கோடி ரூபாய் வரை மூலதனமிட்டு ''செபி''யிடம் விண்ணப்பித்துக் கொண்டாலே இன்று யாரும் நிதி முதலீட்டு நிறுவனங்களைத் தொடங்கி விட முடியும். செபி அவ்விண்ணப்பதைப் பரிசீலித்து முடிவு எடுக்கும் முன்பே அவை புதிய பங்குகளை வெளியிடவும் சட்டரீதியாகவே உரிமை பெற்று விடுகின்றன. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், மோசடிப் பங்குகளை அந்நிதி நிறுவனங்கள் வெளியிட்டிருந்தால் கூட நடவடிக்கை எடுக்க முடியாது.

இந்த ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு இன்று நூற்றுக் கணக்கான நிறுவனங்கள் குறைந்த முதலீட்டில் - ரூ.5 கோடி வரை - மலைப் பிரதேசங்களில் சுற்றுலா விடுதிகள்,


விசாரணைக்கு கொண்டு வரப்படும் எம்.எஸ்.ஷூஸ் அதிபர் பவன் சச்தேவா.





படிப்பகம்

www.padippakam.com



**தண்டனையிலிருந்து தப்பிக்க இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ராஜன் பிள்ளை**

தேக்கு மரம் வளர்ப்பு, பழத் தோட்டம், இறால் வளர்ப்பு போன்ற தொழில்களைத் தொடங்கப் போவதாக அறிவிக்கின்றன; தங்களின் பங்குகளை இந்த நிதி நிறுவனங்கள் வெளியிடுவதற்கு உரிமையும் அளிக்கின்றன. கடந்த நான்கே மாதங்களில் பம்பாய் பங்கு சந்தையில் மட்டும் 443 புதிய நிறுவனங்கள், அவற்றைப் பற்றிய எவ்வித ஆய்வுமின்றி பங்குகளை வெளியிட அனுமதிக்கப் பட்டுள்ளன.

''பங்கு சந்தை வியாபாரத்திலுள்ள கலவையான நடவடிக்கைகளின் காரணமாக, கடுமையான சட்ட விதிகள் கொண்டு வந்தாலும் இம்மோசடிகளைக் கண்காணிக்க முடியாது'' என முதலாளித்துவ பொருளாதார அறிஞர்களே ஒத்துக் கொள்கின்றனர். இதற்குச் சான்றாக சமீபத்தில் சிங்கப்பூர் நாட்டில் நடந்திருக்கும் ''பேரிங்ஸ் விவகாரத்தை'' உதாரணங் காட்டுகிறார்கள்.

நிக்கோலஸ் லீசன் என்ற ஆங்கிலேய இளைஞன் சிங்கப்பூரில் ''பேரிங் சகோதரர்கள் இலண்டன் வங்கி'' என்ற பிரிட்டன் நாட்டு வங்கியொன்றின் பங்கு சந்தை தரகனாகச் செயல்பட்டு வந்தான். கடந்த மார்ச் மாதம் ஜப்பான் பங்கு சந்தை வளர்ச்சி 20,000 புள்ளிகளைத் தாண்டும் எனக் கணக்கிட்டு 3600 கோடி ரூபாய் அளவிற்கு அவ்வங்கியின் பணத்தை கிழக்காசிய பங்கு சந்தையில் கொட்டினான் அவன். ஆனால் ஜப்பான் நகரமான கோபேயில் நிகழ்ந்த பூகம்பத்தையடுத்து ஜப்பான் பங்கு சந்தை 18000 புள்ளிகளுக்குக் கீழே சரிந்து விழுந்தது. 2250 கோடி ரூபாய் மட்டுமே ஒட்டுமொத்த மூலதனமாகக் கொண்டிருந்த அவ்வங்கி, இச்சரிவில் இருந்து மீளமுடியாமல் திவாலாகிப் போனது. பங்கு சந்தை சூதாட்டம் ஏற்படுத்தும் அபாயகரமான விளைவுகளுக்கு இது ஒரு சான்று.

தாராளமயமாக்கலின் பின், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தடையின்றி முதலீடு செய்யக் கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பது, உள்நாட்டில் புரண்டு வரும் கருப்புப் பணம் மூலதனமாக மாற வழி ஏற்படுத்தித் தந்துள்ளது. பத்து வருடங்களுக்கு முன்பு வரை மின்னணு சாதனங்கள், தங்கம் போன்ற நுகர் பொருட்களைக் கடத்துவதுதான் இரகசிய உலகப் பேர்வழிகளின் முக்கியத் தொழில். இன்றோ ''ஹவாலா'' எனப்படும் பணக் கடத்தல் தான் மிகவும் இலாபகரமானது.

உள்நாட்டில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் லஞ்சம், ஊழல், மோசடிகள் மூலம் சேர்த்த பணத்தை இந்த இரகசிய உலகப் பேர்வழிகளின் மூலம் கள்ளச் சந்தையில் அந்நிய நாட்டு ரூபாயாக மாற்றி கடத்திச் சென்று வெளிநாட்டு வங்கிகளில் போடச் செய்கின்றனர். பின்னர் தங்களது வெளிநாட்டு - உள்நாட்டு பினாமிகளின் மூலம் மனை விற்பனை, பங்கு முதலீடு, ஐந்து நட்சத்திர விடுதிகள் போன்ற தொழில்களில் முதலீடு செய்வது என இறங்கியிருக்கிறார்கள்.

### மோசடியே முதலாளிகளின் மூலதனம்

இராசன் பிள்ளை - சிங்கப்பூரில் வாழும் வெளிநாட்டு இந்தியர் இவர். ''பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ்'' எனும் தொழில் நிறுவனத்தின் தலைவராக இவர் இருந்த பொழுது, 70 கோடி ரூபாய் அளவிற்கு மோசடிகள் செய்து, தனது சொந்த தொழில்களுக்கான மூலதனத்தைத் திரட்டினார் என்பதும் உள்ளிட்ட 23 மோசடி வழக்குகள் சிங்கப்பூரில் இவர் மீது நடந்தன. இவ்வழக்குகளை விசாரித்த நீதிமன்றம் இராசன் பிள்ளைக்கு 14 ஆண்டு கால சிறைத் தண்டனை விதித்துள்ளது. இத்தண்டனையில் இருந்து தப்புவதற்காக கிரிமினல் - மாஃபியா கும்பல்களைப் போல இந்தியாவிற்குத் தப்பித்து வந்துள்ளார், இத்தொழில் அதிபர். மேலும் இவர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சிங்கப்பூர் கிளையில் 30 கோடி ரூபாய் அளவிற்கு மோசடிகள் செய்துள்ளதாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

டெல்லியில் கைது செய்யப்பட்டுள்ள ஹவாலா கடத்தல் மன்னன் ஜெயின், சென்னையில் கைது செய்யப்பட்டுள்ள அமீர் - இக்கோஷ்டிகள் இரண்டும் உயர்மட்ட அரசியல் தலைவர்களின் செல்வாக்கைப் பெற்றிருப்பது விசாரணையின் போது தெரிய வந்தது. அமீர் கோஷ்டி ஜெயா கும்பல் அதிகார முறைகேடுகள் மூலம் கொள்ளையடித்திருக்கும் பல கோடிக்கணக்கான ரூபாய்களை சிங்கப்பூர் டாலராக மாற்றிக் கடத்திச் செல்லப் பொறுப்பெடுத்துள்ளது. இக்கும்பலின் பினாமியான தொழிலதிபர் இராஜரத்தினம் தமிழகத்தின் புதுப் பணக்காரனாக உலா வருவதன் அஸ்திவாரமே இந்த ஹவாலா கடத்தல் தான்.

வெளிச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்திற்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, போலியாக அவற்றின் மதிப்பை உயரச் செய்கிறது இந்த ஹவாலா கடத்தல். இதன் காரணமாக அந்நியச் செலாவணி வருவாயில் மோசமான விளைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு. சமீபத்தில் சிங்கப்பூர் டாலரின் மதிப்பு உயர்ந்ததற்கு இக்கடத்தல்தான் காரணமென நிதி அமைச்சகம் குற்றஞ் சாட்டியுள்ளது.

கட்டுப்பாடான பொருளாதார அமைப்புமுறை நிலவுவதால் தான், ஊழலும் லஞ்சமும் மோசடிகளும் தலைவிரித்தாடுவதாகவும் தாராளமயமாக்கலின் மூலம் தனியார்துறையை ஊக்குவித்தால் இந்நோய்க் குறிகள் மறைந்து போகுமென்றும் வாய்ச்சவடால் அடித்தார்கள் ஆட்சியாளர்கள். இதற்காக அமெரிக்காவை உதாரணங்காட்டினார்கள் ஏகாதிபத்திய விசுவாசிகள்.

தாராளமயமாக்கலின் பின் அந்நிய மூலதனம் வெள்ளமெனப் பாய்ந்து தொழில் வளம் பெருகும் என்ற அவர்களின் கணிப்பு இன்று பகற்கனவாகிப் போனது; மாறாக பங்கு சந்தை தோட்டமும் மோசடி தொழில் - நிதி நிறுவனங்களும் கருப்புப் பண முதலீடும் பல்கிப் பெருகி நாட்டின் பொருளாதாரத்தை அரித்துத் தின்னத் தொடங்கி விட்டன; அழுகி நாறிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முறையில் இருந்து ஒட்டுண்ணியைத் தவிர வேறென்ன உருவாகும்?

• ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com



# இந்து ராஜ்ஜியத்தின் சாதிவெறி கோரமுகம்

கடந்த மே மாதம் 12-ந் தேதியன்று குஜராத் மாநிலத்தின் மேஹ்சானா மாவட்டத்தைச் சேர்ந்த காதி என்ற சிறு நகரத்தில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மீது, பா.ஜ. கட்சியின் தலைமையில் படேல் என்ற மேல் சாதி வெறியர்கள் திட்டமிடப்பட்ட கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர். குஜராத் மாநில பா.ஜ.க. அரசின் சுகாதார மந்திரி நிதின் படேல் தலைமையில் 4000-க்கும் அதிகமான மேல்சாதி குண்டர்கள், தாழ்த்தப்பட்டோரைக் கற்களைக் கொண்டு தாக்கியும், அவர்களின் குடியிருப்புகள், கடைகள், கால்நடைக் கொட்டகைகள், உடமைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் வெறியாட்டம் போட்டனர். மாநில போலீசோ மேல்சாதி குண்டர்களைத் தடுத்து விரட்டியடிக்காமல், தாழ்த்தப்பட்டோர் தாக்கப்படுவதை ரசித்துப் பார்த்து மகிழ்ந்தது; மேலும் தாழ்த்தப்பட்டோர் கொடுத்த புகார் மனுக்களையும் பதிவு செய்ய மறுத்துவிட்டது. தாழ்த்தப்பட்டோர் மேல்சாதியினர் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்து விடாதபடி, தாழ்த்தப்பட்டோர் காலனிகளின் அருகே போலீசு காவல் போட்டு கண்காணிக்கவும் தொடங்கியது.

**தீயிடப்பட்ட தலித் குடிசைகள் - சிறுகடைகள்; பாரதீய ஜனதாவின் சாதிவெறி அட்டூழியம்.**

சம்பவம் நடந்த மறுநாள் தொடங்கி இப்பகுதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் மக்கள் மாநிலத் தலைநகரில் பா.ஜ.க. அரசின் மேல்சாதி வெறியை அம்பலப்படுத்தி, தொடர்ச்சியாக மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்; தாக்குதலை எதிர்த்து உண்ணாவிரதம் தொடங்கியவர்களுள் ஒருவர் இறந்து விட்டதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. ஆரம்பத்தில், ''தனது



அரசின் சுகாதார மந்திரி இத்தாக்குதலில் ஈடுபட்டதற்கான சாட்சிகள் இல்லை'' என உண்மைகளை மூடி மறைக்க முயன்றது பா.ஜ.க. ''உண்மை கண்டறியும் குழு'' என்ற பெயரில் மாநில பா.ஜ.க. கட்சித் தலைவர்கள் காதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனால் தாழ்த்தப்பட்ட பெண்கள் இக்குழுவினரை வழி மறித்து ஊருக்குள் நுழைய முடியாதபடி தடுத்துத் திருப்பி அனுப்பிவிட்டனர். தற்பொழுது நாடெங்கும் இச்சம்பவத்திற்கு எதிரான கண்டனக் குரல்கள் வலுக்கவே, பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் கோரியபடி உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார், முதல்வர் கேசுபாய் படேல். எனினும் இவ்விசாரணையை முடக்கவும் சாதி வெறியர்கள் முயன்று வருகின்றனர். ''நாம் அனைவரும் இந்து'' என்ற நரித்தனமான கோஷத்தை முன் வைத்து குஜராத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது பா.ஜ.க. ஆனால் ஓட்டுச் சீட்டின் மை உலருவதற்கு முன்பே தனது மேல்சாதி வெறி கோர முகத்தைக் காட்டிக் கொண்டுவிட்டது, அது.

# கிரிமினல் வாரிசின் ரௌடித்தனம்

பஞ்சாபில் கிதர்பாகா தொகுதியில் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலில் ஆளும் காங்கிரசுக் கட்சி வெற்றி பெறுவதற்காக முதல்வரின் பேரனாகிய குர்கிரத்சிங் வன்முறை வெறியாட்டத்தில் இறங்கி ஆட்டம் போட்டுள்ளன. கடந்த ஆண்டில் இவன் சுற்றுலாப் பயணியாக வந்த பிரெஞ்சு நாட்டு இளம் பெண்ணைக் கடத்திச் சென்று கற்பழிக்க முயன்று காங்கிரசுக் கட்சிக்குப் பெருமை சேர்த்தவன். கிதர்பாகா தொகுதியில் அனைத்து அகாலி கட்சிகளும் ஒன்றுபட்டு பொதுவேட்பாளரை நிறுத்தியுள்ளதால், தோல்வி பயத்தில் உள்ள காங்கிரசார், வாக்காளர்களைப் பீதியூட்டி பயமுறுத்தும் வேலையை குர்கிரத்சிங் தலைமையில் ஆரம்பித்தனர்.

அதன் உச்சகட்டமாக, கடந்த மே - 9-ந் தேதியன்று கிதர்பாகாவில் அகாலி தளத்தினர் தேர்தல் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த குர்கிரத்சிங் தனது பாதுகாப்புப் போலீசாரோடு சேர்ந்து கொண்டு அவர்களை மிருகத்தனமாக தாக்கியதோடு, ஒரு இளம்பெண் உட்பட 5 அகாலி கட்சி ஊழியர்களைக் கடத்திச் சென்றான். இதைத் தடுக்க முற்பட்டவர்களை ஏ.கே.47 ரக துப்பாக்கியால் சுட்டு விரட்டியடித்துள்ளான். பட்டப் பகலில் நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையில் இந்த அட்டூழியம் நடந்துள்ள போதிலும், ''அந்த நாளில் நான் அங்கு இல்லவேயில்லை'' என்று கூசாமல் புளுகுகிறான் இந்த அரசியல் ரௌடி. பஞ்சாப் போலீசாரும் முதல்வரின் கிரிமினல் பேரனுக்கு விசுவாசமாக இந்தப் புகார்கள் அனைத்தும் பொய்யானவை என்று சான்றிதழ் கொடுக்கின்றனர். அதிகார வெறிபிடித்து ஆடும் கிரிமினல் வாரிசுகளின் கொட்டத்திற்கு இந்திய அரசியலில் நீண்ட பராம்பரியம் உண்டு. அன்று, பாசிச இந்திராவுக்கு ஒரு சஞ்சய்; நேற்று தேவிலாலுக்கு ஒரு சௌதாலா; இன்று பஞ்சாப் முதல்வர் பியந்த்சிங்குக்கு ஒரு குர்கிரத் சிங்!

# கேரள போலீசின் வக்கிரமான சித்திரவதை

கேரளாவின் வயநாட்டிலுள்ள அப்பபாரா கிராமத்தில் ஆதிவாசி இளைஞர்கள் சாராயக் கடைகளுக்கு எதிராக நடத்திவரும் போராட்டத்தை ஒடுக்க, போலீசார் மேற்கொண்ட வக்கிரமான அடக்குமுறை அம்மாநிலத்தையே உலுக்கியுள்ளது. கடந்த மே 8-ந் தேதியிலிருந்து ''தர்ணா'' போராட்டம் நடத்திவரும் ஆதிவாசி மக்களை அன்றாடம் கைது செய்து வந்த போலீசார், கடந்த மே 14-ந் தேதியன்று இளைஞர்கள் பலரை கிராம மக்கள் முன்னிலையிலேயே நிர்வாணமாக்கி மிருகத்தனமாக அடித்து இழுத்துச் சென்று



படிப்பகம்

www.padippakam.com



உள்ளனர். போராட்டத்தில் பங்கேற்ற நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களையும் பெண்களையும் கைது செய்த திருநெல்லி போலீசு, அவர்களை நிர்வாண மாக இரண்டு நாட்களுக்கு ஒரே கொட்டடியில் அடைத்து வைத்து வக்கிரமான முறையில் சித்திர வதை செய்துள்ளது. இதில் கொடுமை என்னவென் றால் ஒரு பெண் போலீசுக்காரியே, ஆண் போலீசுக் காரன்களோடு சேர்ந்து கொண்டு ஆதிவாசி இளை ஞர்களை நிர்வாணமாக்கி சித்திரவதை செய்துள் ளாள். இக்காட்டுமிராண்டித்தனம் மெதுவாக வெளியு லகுக்குத் தெரிந்து நாறத் தொடங்கியதும் கேரள போலீசு தலைமை இயக்குனர் விசாரணை நாடகமாடி வருகிறார்.

அப்பபாரா கிராமத்தில் ஆதிவாசி மக்கள் மீது இத்தகைய தாக்குதல் முதன்முறையாக நடப்பதல்ல. ஏறத்தாழ 9 ஆண்டுகளுக்கு முன்பு எஸ்டேட் முதலா ளிகளும், போலீசு அதிகாரிகளும் அப்பப்பாரா ஆதி வாசி கிராமத்திலிருந்து பெண்களை இழுத்து வந்து, அவர்கள் வாயிலே வலுக்கட்டாயமாக சாராயத்தை ஊற்றி, நிர்வாணமாக்கி நிலவொளியில் ஆடவைத்து வக்கிர வெறியோடு ரசித்த கொடுமை நடந்தது.

அடிமைக்கால வரலாற்றுக் கதைகளிலே காணும் வக்கிரமான கொடூரமும் - காட்டுமிராண்டித்தனமும் இந்தியாவில் கேள்வி முறையின்றி தொடர்வதை நிரூ பிக்க அப்பபாரா ஒன்றே சான்று கூறப் போதுமானது.

## ராம ராஜ்ஜியத்தில் பட்டினிச் சாவுகள்

இந்து வெறியர்கள் ஆட்சிக்கு வந்துள்ள மகாராஷ் டிரா மாநிலத்தில், துலே மாவட்டத்திலுள்ள காட்கி எனும் கிராமத்தில் அண்மையில் 4 குழந்தைகள் பட்டி னியால் மாண்டு போயுள்ளனர். அதிர்ச்சியூட்டும் இச் செய்தி பத்திரிகைகளில் வெளியானதும் மராட்டிய இந்துவெறி அரசு இதை திடலடியாக மறுத்து நிமோ னியா காய்ச்சலால் மாண்டதாகப் புளுகியது. ஆனால் கிராமப் பஞ்சாயத்துத் தலைவரோ, இதுவரை 9 குழந் தைகள் பட்டினியால் மாண்டு போயுள்ளதாகக் கூறுகி றார். துலே மாவட்டத்தில் மட்டும் வறட்சியின் காரண மாக கடந்த இரு மாதங்களில் 20-க்கும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன.

மகாராஷ்டிராவின் பின்தங்கிய மரத்வாடா பிராந்தியத்தில் குறிப்பாக பீடு, துலே, அம்ராவதி, தானே ஆகிய மாவட்டங்கள் வறட்சியின் கோரப்பிடி யில் சிக்கியுள்ளன. வெடித்த நிலமும், வறண்ட கிணறு களும், எலும்பும் தோலுமான மக்களும் எத்தியோப் பியாவை நினைவூட்டுவதாக பத்திரிக்கைகள் எச்சரிக் கின்றன. கடந்த பத்தாண்டுகளாகவே இப்பிராந்தியத் தில் இதே நிலைமை நீடிக்கிறது. ஆயிரக்கணக்கான கிராமங்களில் இன்று வரை சாலையோ, குடிநீரோ, மருத்துவமனைகளோ கிடையாது. ஆனாலும் கடந்து ஆண்டில் மட்டும் 1600 கோடி ரூபாய் செலவிட்டுள்ள தாக அரசு கணக்கு காட்டுகிறது.

இதில் கொடுமை என்னவென்றால், கடந்த ஆண்டில்தான் இப்பிராந்தியம் நிலநடுக்கப் பேரழி வால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ''பிளேக்'' நோயினால் நூற்றுக்கணக்கா னோர் பலியாகினர். மீண்டும் இவ்வாண்டில் வறட்சி யின் பிடியில் சிக்கி ஆயிரக்கணக்கான மக்கள் பட்டி னிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்தியாவிலேயே அதிக அளவுக்கு அணைக ளைக் கொண்ட மாநிலம் மகாராஷ்டிரா. ஆனால் 70%-க்கும் மேலான பாசன நீர் சர்க்கரை ஆலை அதி பர்கள் - நிலப்பிரபுக்களின் கரும்பு விவசாயத்திற்குத் திருப்பி விடப்படுகிறது. மரத்வாடா பிராந்தியமோ குடிநீர் கூட இல்லாமல் வறட்சியில் தவிக்கிறது. காங்கி ரசு துரோகிகள் மட்டுமல்ல, மரத்தா மண்ணின் பெரு மைகளைப் பேசி இந்துவெறி - இனவெறியூட்டி ஆட் சிக்கு வந்துள்ள புதிய ஆட்சியாளர்கள் மக்கள் நல னில் காட்டும் அக்கறை இவ்வளவுதான்!

## வியட்நாம் போரில் வென்றது யார்?

ஏப்ரல் 30, 1975. இருபதாண்டுகளுக்கு முன்பு சின்னஞ்சிறு நாடான வியட்நாமில் அமெரிக்க ஏகாதி பத்தியத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்ட நாள். அந் நாளில்தான் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் பிடி யிலிருந்த தலைநகர் சைகோன் (இன்று ஹோசிமின் நகர்) கம்யூனிஸ்ட் போராளிகளிடம் வீழ்ச்சியடைந் தது. பொம்மை அரசின் தளபதி துவாங்வான்மின் அந்நாளில் சரணடைந்தான். ஒரு சிறிய நாடு மிகப்பெ ரிய ஆதிக்க வல்லரசை வீழ்த்த முடியும் என்று அந் நாள் நிரூபித்துக் காட்டியது. வீரஞ்செறிந்த வியட்நா மின் விடுதலை உலகெங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களுக்கு உத்வேக மூட்டியது.



பார்ப்பன ஆட்சியின் மெத்தனம்; மஹாராஷ்டிராவில் பட்டினியால் மெலிந்து மரணத்துடன் போராடும் குழந்தை

அன்று வீரத்தின் விளைநிலமாக இருந்த வியட் நாமின் கட்சியையும் ஆட்சியையும் கம்யூனிசத்தின் பெயரால் துரோகிகள் கைப்பற்றிய பிறகு, இன்று அது மீண்டும் அமெரிக்காவின் மறுகாலனியாக மாறி வருகிறது. இந்தியாவைப் போன்றே வியட்நாமும் உலக வங்கி ஐ.எம்.எப்-ன் கடன் பொறியில் சிக்கித் தவிக்கிறது. அதன் அரசுத்துறை போலி சோசலிசப் பொருளாதாரத்தை தகர்த்து, 'சுதந்திர' சந்தைப் பொரு ளாதாரத்தை ஊக்குவிப்பதற்காகவே உலக வங்கி 200 கோடி டாலர் அளவுக்கு ஈராண்டுகளுக்கு முன்பு கடன் கொடுத்துள்ளது. இதுதவிர வியட்நாமின் முன் னாள் காலனியாதிக்க நாடுகளான ஜப்பானும் பிரான்சும் ''வியட்நாமின் நீண்டகால நண்பர்கள்'' எனும் புதிய உறவு கொண்டு கடனளிக்க முன்வந்துள் ளன. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் அன்றைய பொம்மை அரசின் கடன்களைக் கூட இப்போதைய போலிக் கம்யூனிச ஆட்சியாளர்கள் வட்டியுடன்



படிப்பகம்

www.padippakam.com



திருப்பிச் செலுத்துவதாக ஒப்புக் கொண்ட பிறகு, இப்போது அமெரிக்கா அதனுடன் ''சுமுக உறவு'' கொள்ள முன் வந்துள்ளது. 20 ஆண்டுகளுக்கு முன்பு புரட்சியாளர்களால் எரிக்கப்பட்ட அமெரிக்கக் கொடி இன்று வியட்நாமிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் எவ்வித தடையுமின்றி பறந்து கொண்டிருக்கிறது.

வியட்நாமில் கம்யூனிசத் துரோகிகள் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு, ரஷ்ய - கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களைத் தொடர்ந்து, பொருளாதார சீர்குலைவு நடவடிக்கைகள் '80-களின் இறுதியில் தொடங்கியது. கடந்த ஐந்தாண்டுகளில் 12,300 அரசுத்துறை நிறுவனங்களில் 5,000-க்கும் மேற்பட்டவை மூடப்பட்டு விட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. எண்ணெய் - எரிவாயு, சுரங்கம், எஃகுத் தொழில் முதலான அடிப்படையான துறைகள் அன்னிய மூலதன ஆதிக்கப் பிடியில் சிக்கியுள்ளன. 10 லட்சம் தொழிலாளர்களுக்கும் 2 லட்சம் அரசு ஊழியர்களுக்கும் ''லே-ஆப்'' கொடுக்கப்பட்டுள்ளது. பணவீக்கம், விலையேற்றம் காரணமாக 25%-க்கும் மேலான மக்கள் அரைப்பட்டினி - முழு ஏழ்மை நிலையில் பரிதவிக்கின்றனர். உலக வங்கியின் உத்தரவுப் படி ஆரம்பப் பள்ளிகளில் கல்விக்கட்டணம் வசூலிக்கப்பட்டதைத் தொடர்ந்து 7 லட்சம் குழந்தைகள் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டனர். மருத்துவ - சுகாதாரப் பணிகளுக்கான அரசு மானியம் குறைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டதால், முன்பு ஒழிக்கப்பட்ட தொற்று நோய்கள் மீண்டும் பரவி வருகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், 20 ஆண்டுகளுக்கு முன்பு அதிகார பூர்வமாக யுத்தம் முடிவுக்கு வந்ததே தவிர இன்னமும் காலனியாதிக்கப் போர் புதிய வகையிலே தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ''ஏஜெண்ட் ஆரஞ்சு'' எனும் ரசாயன யுத்தம் இப்போது இல்லை. நாபாம் குண்டுகள் இல்லை. வன்முறை யுத்தத்துக்குப் பதிலாக பொருளாதார ஆதிக்கத்துக்கான புதிய முறையிலான யுத்தம் நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆயினும் வியட்நாம் விடுதலையின் 20-வது ஆண்டு விழாவின் போது, நாட்டை மறு அடகு வைத்துவிட்ட போலிக் கம்யூனிச துரோகிகள் அமெரிக்க ஆக்கிரமிப்புக் கொடுமைகளை பற்றி ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. ''கடந்த காலத்துக்கு கதவடைப்போம்; ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவோம்'' என்று சந்தர்ப்பவாத வீர வசனம் பேசினர். இத்துரோகிகளால் வியட்நாம் இன்று ஏகாதிபத்தியங்களின் இரும்புப் பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கிறது. வியட்நாமை போரில் இறுதியில் வென்றது நாங்கள் தான் என்று அமெரிக்க வல்லரசு கொக்கரித்துக் கொண்டிருக்கிறது.



**அமெரிக்கக் கொடியுடன் கூடிய தொப்பி அணிந்து செல்லும் வியட்நாமின் இளைய தலைமுறை**

## சாதிவெறியில் வடக்கின் வழியில் தமிழகம்

**த**மிழ்நாட்டின் கோயம்புத்தூர் நகரின் அருகேயுள்ள அவிநாசி என்ற ஊருக்குப் பக்கத்தில் இருக்கும் கிராமம் ஆண்டிபாளையம். இக்கிராமத்தின் தண்ணீர் தேவைக்காக ஒரு கிணறும், இரு மேல்நிலை நீர்த் தொட்டிகளும் அரசால் அமைக்கப்பட்டுள்ளன. தொட்டியில் நீர் நிரப்பும் பொறுப்பு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவருக்குத் தரப்பட்டது. இதனை மேல்சாதி வெறியர்கள் எதிர்க்கத் தொடங்கினர்.

இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் 30-ந் தேதி மேல்சாதியினைச் சேர்ந்த நான்கு பேர், தண்ணீர் நிரப்பும் பொறுப்பில் இருந்த தர்மராசனிடம் சென்று மோட்டார் அறைச் சாவியைத் தங்களிடம் தந்துவிடுமாறு மிரட்டியுள்ளனர்; அவர் அதற்கு மறுக்கவே நான்கு பேரும் தர்மராசனைத் தாக்கி திரும்பிவிட்டனர். இதையடுத்து தர்மராசன் நான்கு பேர் மீதும் போலீசில் புகார் கொடுக்க, அவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனாலும் கைதான அன்று மாலையே பிணையில் வெளிவந்தனர்.

இதனை மிகப் பெரும் அவமானமாகக் கருதிய மேல்சாதி வெறியர்கள், சென்ற மாதம் மே மாதம் 12-ந் தேதியன்று தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அரண், மணி, கருப்பசாமி மூவர் மீதும் மேல் சாதிக்காரர்களை ஏசினார்கள் எனக் குற்றஞ் சுமத்தி, தாக்கத் தொடங்கினார்கள். இத்தாக்குதலில் உள்ளூர் ஆரம்பப் பள்ளியின் தலைமையாசிரியரும் அவரது மகனும் முக்கியமானவர்கள்.

அரண் தாக்குதலில் இருந்து தப்பித்து ஓடிவிடவே மற்ற இருவரையும் கல்லிமடை எனும் ஊருக்குச் செல்லும் சாலைக்கு கொண்டு வந்து நிர்வாணப் படுத்தி கைகளைப் பின்புறம் கட்டி கற்களைக் கொண்டு தாக்கியும் இழிவுபடுத்தி இருக்கிறார்கள் சாதிவெறியர்கள். அன்று மாலையே அய்யாவு என்ற மற்றொரு தாழ்த்தப்பட்டவரையும் தாக்கியுள்ளனர்.

இது பற்றி தாழ்த்தப்பட்ட மக்கள் சட்டம் - ஒழுங்கு போலீசிடமும் குடியுரிமை பாதுகாப்பு போலீசிடமும் புகார் கொடுக்க முயற்சித்தார்கள். போலீசின் இந்த இரு பிரிவுமே புகாரைப் பெற்று வழக்குப் பதிவு செய்ய மறுத்துவிட்டன. சம்பவம் நடந்து பத்து நாட்கள் கழித்து செய்திகள் வெளிவந்த பின்னும் தாக்குதலில் ஈடுபட்ட எந்தவொரு மேல்சாதி வெறியனும் இதுநாள் வரை கைது செய்யப்படவில்லை.

ஆனால் இதே ஜெயா அரசுதான் சுப்பிரமணிய சுவாமி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ''பறையன்'' எனக் கூறி அனுமானப்படுத்திவிட்டதாகக் கூக்குரலிட்டு, சுவாமியை குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்துவிட அவர் பின்னே நாயாய் அலைந்தது. உண்மையிலேயே பார்ப்பன ஜெயா கும்பலின் ஆட்சியில் காரணை துப்பாக்கி சூடு, தஞ்சை மாவட்டம் ஆலக்குடி கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் மீது நடந்திருக்கும் தாக்குதல்கள் - துப்பாக்கி சூடு, ஆண்டிபாளையம் சம்பவம் - இவையாவும் வடமாநிலங்களைப் போலவே தமிழ்நாட்டிலும் தாழ்த்தப்பட்டோரின் மீதான மேல்சாதி வெறியர்களின் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையே காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# திருப்பூர் ஆலைகளுக்குப் பேரிடி

**நூல் விலையேற்றத்தாலும் நுழையும் பன்னாட்டு நிறுவனங்களாலும் பனியன் ஏற்றுமதிக்கு மிகப் பெரும் அபாயம் காத்திருக்கிறது.**

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் திருப்பூர் நகரம், பின்னலாடை ஏற்றுமதித் தொழிலில் உலகப் புகழ் வாய்ந்தது. கடந்த பத்தாண்டுகளில் 3000-க்கும் அதிகமான பின்னலாடை, சாயப் பட்டறை, துணியச்சு (Fabric Printing) போன்ற பல்வேறு வகையான பின்னலாடை தொழில் சார்ந்த தொழிலகங்கள் திருப்பூரில் உருவாகியிருப்பதோடு, இதன் மூலம் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்து வருகிறது.

1985-ல் வெறும் 18 கோடி ரூபாயாக இருந்த திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதித் தொழில் அந்நிய செலாவணி வருவாய், 1993-94-ல்2200 கோடி ரூபாயாகும். தற்பொழுது அரசு செயற்படுத்தி வரும் தாராளமயக் கொள்கைகளின் கீழ் அதனின் ஏற்றுமதி முக்கியத்துவம் காரணமாக திருப்பூர் பின்னலாடை, ஏற்றுமதித் தொழில் இன்னும் அதிக வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். ஆனால் கடந்த மூன்று வருடங்களாக இத்தொழிலில் ஏற்பட்டு வரும் தேக்கம் பின்னடைவு காரணமாக ''அந்நிய செலாவணி வருமானம் 1500 கோடி ரூபாயாகக் குறைந்து விடும்'' என்கிறார் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் சக்திவேல்.

புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்த பின்பு, பருத்தியையும் பருத்தி நூலையும் தடைகள் இன்றித் தாராளமாக ஏற்றுமதி செய்து கொள்ள அனுமதியளித்தது மைய அரசு. இதன் காரணமாக பின்னலாடைக்குக் பயன்படும் ''ஹொசைரி'' நூலின் விலை 30 சதவீதம் உயர்ந்தது.

ஏற்றுமதிக்காக அந்நிய நாடுகளுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தில், கையெழுத்திடும் தேதியில் முடிவாகும் விலைக்குத்தான் பின்னலாடைகளை ஏற்றுமதி செய்ய வேண்டும் என ஏகாதிபத்திய நிறுவனங்களுக்குச் சாதகமான விதியொன்று உள்ளது. இதன் காரணமாக கடந்த 93-94-ம் ஆண்டுகளில் திடீர் திடீரென நூல் விலை கிலோ ஒன்றுக்கு 12 ரூபாயென மூன்றுமுறை உயர்ந்தபொழுது ஏற்றுமதிக்கு நியாயமான விலையைப் பெற முடியவில்லை. இதோடு பின்னலாடை ஏற்றுமதிக்கு தாராளமயமாக்கலின் முன்பு வரை கொடுத்து வந்த வரி விலக்கையும் மானியத்தையும் மைய அரசு விலக்கிக் கொண்டதோடு, புதிய வரிகளையும் விதிக்கத் தொடங்கியது.

இதனால் இத்தொழிலில் ஈடுபட்டு வந்த சிறிய உற்பத்தியாளர்கள் மேலும் மூலதனத்தைத் திரட்ட வழியின்றி நசியத் தொடங்கினர். தற்பொழுது இந்த ஏற்றுமதித் தொழிலை நம்பி பிழைத்து வந்த பல தரப்பட்ட ஒன்றரை லட்சம் தொழிலாளர்களில் 40 சதவீதம் பேர் - 60,000 தொழிலாளர்கள் - வேலை இழந்து நடுத்தெருவிற்கு வந்து விட்டனர்.

தாராளமயமாக்கலின் காரணமாக ஏற்பட்டுவரும் இந்த நசிவு ஒருபுறமிருக்க, மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் திருப்பூர் பனியன் தொழிலில் சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ''குழந்தை உழைப்பு தடை செய்யப்பட வேண்டும்'' எனக் கூறத் தொடங்கியுள்ளன. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 'சி அண்ட் ஏ' போன்ற மிகப்பெரும் பின்னலாடை இறக்குமதியாளர்கள், குழந்தை உழைப்பு பயன்படுத்தப்படுமாயின் ''ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வோம்'' என மிரட்டியும் வருகின்றனர். மேலும் ஜெர்மனி, ''பின்னலாடைகளை வெளுப்பதற்கு சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது'' எனக் கட்டளையிடுகிறது. இந்தியாவின் நுகர் பொருட்கள் ஏற்றுமதி வர்த்தகத்தில் தங்கள் பிடியை மேலும் இறுக்கிக் கொள்ளவே ஏகாதிபத்தியங்கள், இந்த மிரட்டல்களை விடத் தொடங்கியுள்ளன. மாறாக, சமூக நலனில் கொண்டுள்ள அக்கறையினால் அல்ல.

இந்த வீழ்ச்சியைத் துரிதப்படுத்தும் முகமாக, மற்றொரு புதிய அபாயமும் இத்தொழிலில் எழ ஆரம்பித்துள்ளது. 6200 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட ஜாக்கி மற்றும் 55000 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட ஹேண்ட்ஸ் என்ற இரு அமெரிக்க நிறுவனங்களும் இந்தியாவின் பின்னலாடை மற்றும் உள்ளாடை சந்தையில் இறங்கத் திட்டமிட்டுள்ளன. இதற்காக டான்டெக்ஸ் மற்றும் பெங்களூரைச் சேர்ந்த பேஜ் அப்பாரல்ஸ் நிறுவனங்களுடன் இவை ஒப்பந்தமிட்டுள்ளன.

'இந்தியாவிலுள்ள உயர் மேட்டுக் குடியினரின் தேவைகளை நிறைவு செய்வதுதான் எங்கள் நோக்கம்' என இவை கூறினாலும், நாளை நமது நாட்டின் உள்நாட்டு சந்தை முழுவதையும் தங்கள் வசம் எடுத்துக் கொள்ளும் வகையில் தான் பன்னாட்டு நிறுவனங்களின் வருகை அமையும். ''இதற்காக தங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைக் கூட பல ஆண்டுகள் வரை தாங்கிக் கொள்ள இந் நிறுவனங்களால் முடியும்'' என்கிறார் கல்கத்தாவைச் சேர்ந்த உள்ளாடை உற்பத்தியாளர் பி.ஆர். அகர்வால். இவர்களின் வருகை உள்ளூர் உற்பத்தியாளர்களை ஒழித்துக் கட்டுவதோடு, சாமானிய மக்களுக்குக் குறைந்த விலையில் உள்ளாடைகள் கிடைப்பதும் நாளடைவில் அரிதாகி விடும்.

இதோடு மட்டும் இந்த நிறுவனங்கள் திருப்தியடைந்து நின்று விடாது. இந்தியாவில் இருந்து வரும் பின்னலாடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வலைப் பின்னலையும் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள முயலும். அந்நிலை வரும் பொழுது மனித உழைப்பைச் சார்ந்து இந்த ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டு வரும் சிறு உற்பத்தியாளர்கள் முற்றிலும் துடைத்தெறியப்படுவர். இதோடு இன்னும் பத்தாண்டுகளில் பல் நூலிழை ஒப்பந்தத்தை ஏகாதிபத்தியங்கள் கைவிடும் பொழுது, உள்ளூர் ஏற்றுமதியாளர்கள் இன்றிருப்பதை விட மோசமான எதிர்காலத்தைத் தான் சந்திக்க வேண்டியிருக்கும்.



• செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# அந்நிய ஆலைகளால் அழியும் சுற்றுச்சூழல்

உலகப் பரப்பளவில் 2 சதவீதம் நிலம் கொண்ட இந்தியாவில் உலக மக்கட்தொகையில் 16% மக்கள் வாழ்கிறார்கள்; இங்கு மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் முன்னணியில் உள்ளது. அதுவும் இந்தியாவின் பெரிய முக்கியத்துவமுடைய 23 நகரங்களில் மக்களின் குடியேற்றம் நாளுக்கு நாள் பெருகி நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. இதனால் சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு என்பது இந்தியாவிற்கு தவிர்க்க முடியாத ஒன்றும், பெருநகரங்களில் உடனடி கவனம் செலுத்தவேண்டிய அவசியமும் உள்ளது. இல்லையெனில் சூரத் நகரில் தாக்கிய பிளேக் போன்ற கொடிய நோய்கள் தாக்கி மக்கள் மடிவதும், இந்தியாவை அந்நிய நாடுகள் புறக்கணித்துப் பொருளாதாரம் சீர்குலைவதும்தான் நடக்கும்.

இவை சுற்றுச்சூழல் பாதிப்புக்கு மக்கள் தொகைப் பெருக்கம்தான் - நகர மயமாக்கம்தான் காரணம் என்று கூறும் முதலாளித்துவ பிரச்சாரகர்களின் கூற்று. இதே போல் கிராமப்புறங்களில் மக்கள் அடுப்பு எரிக்கும் புகையாலும், அடுப்பெரிக்க மரங்களை வெட்டுவதாலும், கால்நடை வளர்ப்பில் அவற்றின் கழிவுப் பொருட்களாலும், விவசாயத்தில் பயன்படுத்தப்படும் ரசாயன உரங்கள் - மருந்துகளாலும் சுற்றுச்சூழல் மாசுபடுவதாகக் குற்றம் சுமத்துகிறார்கள். இந்தியாவின் சுற்றுச்சூழல் மோசமானதற்கு இவைகளை மட்டுமே பூதாகரப்படுத்திக் காட்டி சாதாரண - நடுத்தர மக்களைக் குற்றவாளிகளாக்குகிறார்கள்.

ஆனால் இவைகளால் விளையும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் காட்டிலும் தொழிற்சாலைகளால் அதுவும் பெருந் தொழிற்சாலைகள் பலவற்றால் விளைகிற சுற்றுச்சூழல் பாதிப்புதான் அதிகமானது; ஆபத்தானது. போபால் விஷவாயு விபத்து போன்று நடக்கும்போதோ அல்லது சுற்றுச்சூழல் பாதுகாப்பாளர்களின் கண்டனங்கள், மக்களின் எதிர்ப்புகள் அதிகரிக்கும்போதோ மட்டுமே தொழிற்சாலைகளால் விளைகிற சுற்றுச்சூழல் பாதிப்புகள் பற்றி பேசுகிறார்கள்; வேறு வழியின்றி பாதிப்புகளை ஒத்துக் கொள்ளவும், சில கண்துடைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஆட்சியாளர்கள் முயல்கிறார்கள்.

புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் காட், உலக வர்த்தகக் கழக (WTO) ஒப்பந்தங்களின் விளைவாக அண்மைக் காலமாக அந்நிய மூலதனம் இந்தியாவில் பெருமளவு அதிகரித்துள்ளது. அந்நிய-தேசங்கடந்த, பன்னாட்டு கம்பெனிகளின் முதலீடுகள், சுற்றுச்சூழலுக்குப் பெரிதும் பாதிப்பு விளைவிக்கிற பல பெருந்தொழில்கள் வடிவில் இந்தியாவில் குஜராத், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, மேற்கு வங்கம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் தான் அதிகமாக நுழைந்துள்ளன; நுழைய இருக்கின்றன. குஜராத்தில் மட்டும் கி.பி 2000-ம் வருடத்திற்குள் 25,000 கோடி ரூபாய் மூலதனத்தில் பல ரசாயனத் தொழிற்சாலைகள் தொடங்க அந்நிய மற்றும் இந்திய முதலாளிகள் திட்டமிட்டுள்ளனர். மகாராஷ்டிராவில் கொங்கன் கடற்கரையோரம் 65,606 கோடி ரூபாய் அளவில் பல ரசாயனத் தொழிற்சாலைகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

சுற்றுச்சூழலைப் பாதிக்கும் இப்பெருந் தொழிற்சாலைகளுக்கு எதிராக சுற்றுச்சூழல் பாதுகாப்பாளர்களிடத்திலிருந்து பலத்த கண்டனங்களும், மக்களிடமிருந்து போர்க்குணமிக்க போராட்டங்களும் எழுந்துள்ளதைத் தொடர்ந்து இச்செய்திகள் பத்திரிகைகளில், அரசியல் அரங்கில் விவாதிக்கின்ற ஒரு பிரச்சினையாகியுள்ளது. சில தொழிற்சாலைகளை மாநில அரசு தவிர்க்க முடியமால் தலையிட்டுத் தடுத்து நிறுத்தியும் அப்புறப்படுத்தியும் வருகிறது. இறால் பண்ணைகளுக்கு மட்டும் புதிதாக உருவாவதைத் தடுத்து உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதுவல்லாமல் வேறு பல வழக்குகளில் சுற்றுச்சூழல் பாதிப்பை உருவாக்கும் தொழிற்சாலைகளுக்கு எதிராக அண்மைக் காலங்களில் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் வெளிவந்துள்ளன. இதனாலும் பெருந் தொழிற்சாலைகளால் விளைகிற சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றிய விவாதம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**சுற்றுச்சூழலைப் பாதிக்கும் பன்னாட்டு பெருந்தொழில்களுக்கு எதிரான மக்கள் போராட்டங்களும் உச்ச - உயர் நீதிமன்றங்களின் சில தீர்ப்புகளும் பற்றி விவாதிக்கப்படுகின்றன. சில கண்துடைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.**

★★★

கோவாவில் தாப்பர் - டியூ பாண்ட் (TDP) நிறுவனத்தின் 6, 6 நைலான் என்ற செயற்கை ரசாயன ஆலையால் ஏற்படும் சுற்றுச் சூழல் - சமூக பாதிப்புகளும் இதற்கெதிராக உயிர் தியாகத்தோடு நடந்த மக்களின் போர்க்குணமிக்க போராட்டமும் இதன் விளைவாக ஆலை கட்டுமானப் பணி தடுத்து நிறுத்தப்பட்டதும் அறிவோம் (பார்க்க புதிய ஜனநாயகம் இதழ் எண்:11-12). இன்று இந்த ஆலையை தமிழ் நாட்டில் ஆந்திர மாநில எல்லையை ஒட்டி அமைந்திருக்கும் கும்மிடிப்பூண்டியில் நிறுவிட ஜெயா அரசு ஒப்புதல் வழங்கிவிட்டது.

குஜராத்தில் ''பினானி சிங்க் கிளாஸ் ஃபைபர்'' என்ற கண்ணாடி உற்பத்தி ஆலையும் பகுதி மக்களின் எதிர்ப்பு காரணமாகத் தொடங்க முடியாத நிலையிலுள்ளது. கோல்வாலே பகுதியில் 64 கோடி ரூபாய் செலவில் அமையும் இந்த ஆலைககாக அதிகாரிகள் உதவியுடன் கிராமத்தின் சமுதாய நிலங்களையும் புறம்போக்கு - மேய்ச்சல் நிலங்களையும் வளைத்துப் போட்டு கட்டுமானப் பணி நடந்து வருகிறது. மேலும் இங்கு ஓடும் கோல்வாலே ஆறுதான் சுற்றுவட்டார கிராமங்களின் நெல் விளைச்சலுக்கு ஆதாரமானது. இந்த ஆலையிலிருந்து வெளியேறும் கார்சினோஜெனிக் என்ற நச்சுக்கழிவால் ஆறு மாசுபடும் என்று கூறி ''கால்வாலே நாக்ரிக் சமிதி'' என்ற அமைப்பு மக்களைத் திரட்டி போராடி வருகிறது. இக்கம்பெனி 12 ஹெக்டேர் நிலத்தை கிராம பஞ்சாயத்து கமிட்டிக்குத் தெரியாமலேயே முதலில் அரசை குறைந்த விலைக்குக் கைப்பற்றச் சொல்லி அதிகாரிகள் மட்டத்திலேயே விலைபேசி வாங்கியது இது மக்களை மேலும் போராடத் தூண்டியது.

மகாராஷ்டிரா - ரத்னகிரியில் ஸ்டர்லைட் குரூப் நிறுவனம் 900 கோடி ரூபாய் திட்டத்தில் ஆண்டிற்கு 6000 டன் செப்பு உருக்கும் ஆலையை நிறுவி மக்களின் எதிர்ப்பால் கூடாரத்தை தமிழ்நாடு தூத்துக்குடிக்கு மாற்றி வருகிறது. இந்த



படிப்பகம்

www.padippakam.com

ஆலை வெளியேற்றும் கந்தக ஆக்சைடு மிகவும் நச்சுத்தன்மையுள்ளது எனச் சுற்றுச்சூழல்வாதிகள் எச்சரிக்கிறார்கள். இதனால் கந்தக டை ஆக்சைடை கந்தக அமிலமாக மாற்றுவதற்குரிய முறையையும் அமைக்கப் போவதாகக் கூறி ஆலை முதலாளிகள் மாய்மாலம் செய்து கொண்டுள்ளனர். கம்பெனி நிர்வாகத்தின் எந்த பசப்பல்களுக்கும் ரத்னகிரி மக்கள் மயங்காது "சங்கர்ஸ் சமிதி" என்ற அமைப்பின் கீழ் திரண்டு போர்க்குணத்துடன் போராடினர். இந்த ஆலை கட்டுமானப் பணியில் வேலை செய்யும் ஆட்களைத் தமது "ஆட்டோ ரிக்சா"வில் பயணம் செய்ய அனுமதிக்காது புறக்கணித்தனர், ஓட்டுநர்கள். "ரத்னகிரி டைம்ஸ்" என்ற நாளிதழ் கம்பெனியின் விளம்பரங்களை வாங்க மறுத்து எதிர்ப்பு தெரிவித்தது.

500 ஹெக்டேர் சமுதாய நிலத்தை "மகராஷ்டிரா தொழில் மேம்பாட்டு கழக" அதிகாரிகளிடம் பேரம் பேசி கையகப்படுத்தியது ஸ்டர்லைட் குரூப். உள்ளூர் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் அனுமதி வாங்குவதற்கு முன்பே கட்டுமானப் பணியை தொடங்கி விட்டதால் கிராம பஞ்சாயத்து அவற்றை இடிக்கப் போவதாக ஆலை நிர்வாகத்திற்கு ஓலை அனுப்பியது. இதை மதிக்காமல் தூக்கியெறிந்து விட்டுப் பாதுகாப்பு என்ற பெயரில் ஆயுதந்தாங்கிய குண்டர் படைகளை கொண்டு வந்து இறக்கியது, நிர்வாகம். கிராமத்தார் இதற்கு எதிராகவும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டு எச்சரித்தனர். நிலைமை விபரீதமாகி வருவதை உணர்ந்து அரசு தலையிட்டு, ஆய்வு எல்லாம் நடத்தி, இறுதியில் வேறு வழியில்லாமல் ஆலையை வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ளும்படி உத்தரவிட்டது.

இந்த ஆலை நிர்வாகத்துடன் 31-10-94 அன்று ஜெயலலிதா, 1300 கோடி ரூபாயில் செப்பு உருக்காலையையும் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு முறையையும் தொடங்க தூத்துக்குடியில் 500 ஏக்கர் "சிப்காட்" நிலத்தைக் கொடுக்க சம்மதித்து ஒப்பந்தம் போட்டுள்ளனர். இதைக் கண்டித்து கடந்த ஆண்டே அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒரு அடையாளப் போராட்டம் நடத்தியதோடு சரி. தற்போது பகுதி மக்களிடமும் பெருமளவிற்கு எதிர்ப்பு இல்லாததால் இவ்வாலை கட்டுமானப் பணியைத் தொடங்கி ஜூலை 96-க்குள் முடிக்க துரிதமாக செயல்படுகிறார்கள்.


மகாராஷ்டிரா - ரத்னகிரியில் என்ரான் என்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவனத்தின் தபோல் மின்சக்தி திட்டமும் பலத்த எதிர்ப்பு காரணமாக பிரச்சினைக்குள்ளாகியுள்ளது. இந்நிறுவனம் கையகப்படுத்தியுள்ள 595 ஹெக்டேர் நிலத்தில் நல்ல விவசாய நிலங்களும், மேய்ச்சல் நிலங்களும் அதிகம். எண்ணற்றோர் வேலையிழந்து வேறுபகுதிக்கு குடிபெயர்வதும், நிலச் சொந்தக்காரர்கள் கூலி விவசாயிகளாக மாறிப்போவதும் நடக்கிறது. இம்மின் சக்தி திட்டம் பயன்படுத்தும் (வாயு) எரிபொருள் கந்தக ஆக்சைடை வெளியேற்றி சுற்றுச்சூழலை நாசப்படுத்தும் என்றும், இந்த ஆலையிலிருந்து வெளியேறும் வெப்பநீர் கடலில் கலக்கப்படுவதால் கடல்வாழ் உயிரினங்களைக் கொல்லும் என்றும் எச்சரித்து சுற்றுச்சூழல்வாதிகள் எதிர்க்கின்றனர். இது வல்லாமல் வெளிநாடுகளிலிருந்து கப்பல் மூலம் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு வசதியாக பெரிய கப்பல் தளத்தையும் கட்ட அனுமதி பெற்றுள்ளது, என்ரான் நிறுவனம். பகுதியிலுள்ள மீனவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதும் எதிர்ப்பு போராட்டம் வலுவடையவும் வாய்ப்புள்ளது.

இதை உணர்ந்த ஆலை நிர்வாகம் பலவித சலுகைகள் மூலம் மக்கள் எதிர்ப்பை மழுங்கடிக்க முயற்சித்து வருகிறது. காடல்வாடி கிராம மக்கள் பயன்படுத்தி வந்த திறந்தவெளி கழிப்பிட நிலத்தையும் கையகப்படுத்தியதால் அவர்களுக்கு நவீனவசதி கழிப்பிடங்களைக் கட்டித்தர ஏற்பாடு செய்திருக்கிறது நிர்வாகம். வேலையிழந்தவர்களுக்கு வேலை கொடுக்கவும், மருத்துவ வசதிகள் - கல்வி வசதிகள் செய்து தரவும் உள்ளூர் பஞ்சாயத்துத் தலைவர்களையும் - அரசியல் தலைவர்களையும் விலை பேசவும் முயன்று வருகிறது. எனினும் வாழ்விழந்த பகுதி மக்கள் பல தன்னார்வ குழுக்களின் தலைமையிலும் பஞ்சாயத்தின் தலைமையிலும் எதிராகப் போராடி வருகின்றனர். அரசியல் கட்சிகளும் மூக்கை நுழைத்துத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயல்கின்றனர்.

தென்னிந்திய கடற்கரையோரம் ஓரிசா, ஆந்திரா, தமிழ்நாடு பகுதிகளில் இறால் பண்ணைகள் பெருமளவு விவசாய நிலங்களை ஆக்கிரமித்து உருவாகி வருவதும் மக்கள் எதிர்ப்பு காரணமாக பல இயங்க முடியாமல் உள்ளதும் அறிவோம். ஓரிசாவில் டாட்டா நிறுவனம் சில்கா ஏரியில் இறால் பண்ணை அமைக்க முடியாத வண்ணம் தடுத்து நிறுத்தப்பட்டு இன்றளவும் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது.

வங்களாதேசத்தில் 10,000 ஹெக்டேர் நிலத்தில் அமைந்துள்ள இறால் பண்ணைகளும், பொறிப்பகங்களும் விளைவிக்கும் பாதிப்புகளை ஆய்வு செய்த கமிட்டி, சுற்றுவட்டார பகுதிகளில் ஆடு-மாடு உண்ணும் மர - தாவர இலைகள், புல் முதலியவை குறைந்துள்ளதையும், தேங்காய், பழங்கள் உலர்ந்து இருப்பதையும், கால்நடைகள் மடிவது மட்டுமல்லாமல் பால் சுரப்பது குறைந்து உள்ளதாகவும் கண்டுப் பிடித்துக் கூறியுள்ளனர். தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியிலும் இது போன்று ஆய்வு செய்த நீரி - NEERI என்ற சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனம், மாநில அரசுக்கு இறால் பண்ணைகள் அமைவதால் 600 கோடி ரூபாய்க்கு மேல் நட்டமே ஏற்படுகிறது என்பதை புள்ளிவிவரங்களுடன் முன்வைத்துள்ளது.

தென்னிந்திய கடற்கரைகளுக்கு இன்னொரு அபாயம், பெருகிவரும் ஐந்து நட்சத்திர உல்லாச விடுதிகளாகும். தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா கடற்கரையோரம் 216 உயர்தர - நட்சத்திர விடுதிகள் சுற்றுலா பயணிகளைக் கவர்வதற்காக அமைய உள்ளன. அக்கார் (ACCOR) டே இன், சதர்ன் பசிபிக் போன்ற பல அந்நிய நாட்டு உணவு - விடுதி நிறுவனங்கள் இந்திய முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து கோடிக்கணக்கில் மூலதனமிட அனுமதி பெற்று விட்டார்கள். இவ்விடுதிகளால் கடல் மண் அரிப்பு நிகழ்வது, கடற்கரையோர மரங்கள் - புல்வெளிப் பகுதிகள் அழிக்கப்படுவது சுற்றுச்சூழல் பாதிப்பாகவும் மீனவர்கள் பயன்ப



குஜராத் - சூரத் நகரில் ஒரு ரசாயன ஆலையின் கழிவுநீர் ஓடை



படிப்பகம்

www.padippakam.com

டுத்தும் கடற்கரையோர நிலம் ஆக்கிரமிக்கப்படுவதால் அவர்களது வாழ்வு பறிபோவது சமூக பாதிப்பாகவும் இருக்கும் என சுற்றுச் சூழல் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இதுவல்லாமல் கங்கை ஆறு மாசுபடுவதற்கு எதிரான இயக்கம், பவானி ஆறு மாசுபடுவதற்கு எதிரான இயக்கம் என பல போராட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பாளர்கள் தலைமையிலும் தன்னார்வ குழுக்கள் தலைமையிலும் நடந்து வருகின்றன.

கங்கை ஆற்றை மாசுபடுத்தும் கல்கத்தாவைச் சேர்ந்த 600 தோல் பதனிடும் தொழிற்சாலைகளை இடம் மாற்றக் கோரி மே.வ. அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. புறநகருக்கு இடம் மாற்றி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு முறையை அமைத்து அதன் இயக்கம் பற்றி மாதம்தோறும் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் உத்தரவிட்டுள்ளது. கங்கை செயல்பாட்டு திட்டம் என கங்கை ஆற்றைப் புனிதப்படுத்துவதை செய்வதற்கே தனி துறை ஒதுக்கப்பட்டு பிரிவு 1, பிரிவு 2 என்ற அடிப்படையில் செயல்பட பல கோடிகள் நிதியும் மத்திய அரசால் அளிக்கப்பட்டுள்ளது. கல்கத்தாவில் தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுகளின் பொது சுத்திகரிப்பு முறை செலவுக்கு முதலில் ''கங்கை திட்ட இயக்குநரகம்'' நிதிகொடுக்கும் படியும் பின்னர் தொழிற்சாலை முதலாளிகளிடம் வசூலித்துக் கொள்ளும்படி மாநில அரசுக்கும் கடந்த பிப்ரவரி 20-ந் தேதி உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதேபோல் சுற்றுச்சூழல் மாசுபடுவதைக் காரணமாகக் காட்டி கல்கத்தாவில் பெரிய ஆலைகள் 30-ஐ உடனடியாக மூடச் சொல்லி உத்தரவு பிறப்பித்தது, உச்ச நீதிமன்றம் மேலும் கங்கை ஆற்று மாசுபடுவதைத் தடுப்பதற்காக லக்னோ, கான்பூர் நகரங்களில் உள்ள ஆலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறை பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கங்கை திட்ட இயக்குநரகத்திற்கு உத்தரவு போட்டுள்ளது.

தமிழ்நாடு - கோவை அருகே 750 கோடிரூபாய் செலவில் எஸ்.ஐ.வி. - என்கிற விஸ்கோஸ் கூழ் தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம், சாய மேற்றும் ஆலைகள் முதலிய பல தொழிற்சாலைகளால் பவானி ஆற்று நீர் மாசுபடுகிறது. பவானிசாகர் அணையில் உள்ள 15 மெகாவாட் நீர் மின்சாரத் திட்டம், நீரில் உள்ள நச்சு ரசாயனப் பொருட்களால் அரிப்பு தன்மை அதிகமாகி செயல்படாத நிலையிலுள்ளது. ''பவானி ஆறு பாதுகாப்புக் கூட்டுக் குழு'' என்ற அமைப்பு வழக்கு தொடுத்து போராடி வருகிறது.

தமிழகத்தில் வாணியம்பாடி மற்றும் வாலாஜா பேட்டைக்கு இடையில் உள்ள ஏராளமான தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் 35000 ஏக்கர் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு 40% நெல் விளைச்சல் குறைந்து போய் அதற்கு ஈடாக ராகி, தென்னை, கரும்பு என மாற்று உற்பத்தியில் இறங்கிவிட்டார்கள் விவசாயிகள். இங்கு குடிநீருக்கும், பாசனத்திற்கும் ஆதாரமான பாலாறு மாசுபடுவது அதிகமாகி வருகிறது. ஆலைக் கழிவுகளிலுள்ள உப்பு, குரோமியம், கால்சியம் போன்ற நச்சப்பொருட்களே இவற்றிற்கு காரணம். மே-4ந் தேதி 57 தோல் பதனிடும் ஆலைகளை மூடச் சொல்லி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

''தங்கத் தாழ்வாரம்'' என்று வர்ணிக்கப்படுகிற குஜராத்தின் வாபி பகுதி முதல் மேஹ்சனா பகுதி வரையுள்ள தொழிற்சாலைகளால் பத்து லட்சம் லிட்டர்/டன்னுக்கும் அதிகமாய் வெளியேற்றப்படுகிற நீர் மற்றும் திடப் பொருள் கழிவுகள் காற்று, மழை, வெயிலால்தான் அகற்றப்படுகின்றன. ஆலைகளிலிருந்து வெளியேறும் பென்சிடைன் டைஸ், குளோரின், அமோனியா, போன்ற ரசாயனப் பொருட்கள் காற்றை நஞ்சாக்கி, தொழிலாளர்களுக்கும், சுற்றியுள்ள குடியிருப்பு மக்களுக்கும் பலவித நோய்களைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய நகரங்களில் வாழ்வோரின் இறப்பு விகிதம் அருகிலுள்ள கிராமங்களில் வாழ்வோரின் இறப்பு விகிதத்தைக் காட்டிலும் 40 முதல் 50 சதவிகிதம் அதிகமாக உள்ளது.

குஜராத்தில் வாட்வா, ஆதவ், நரோடா ஆகிய நகரங்களில் உள்ள ஆலைகளால் வெளியேற்றப்படுகிற கழிவுநீர் காரி என்ற ஆற்றில் கலக்கிறது. காரி ஆறு நீர் மாசுபடுவதால் காலாம் பண்டி மற்றும் 11 கிராமங்களின் விவசாயமே பாழாகின்றன. குஜராத்தின் விவசாய உற்பத்தியில் முக்கிய பங்களிப்பு செய்யக் கூடியது இப்பகுதி விவசாயமே. இவை பாழாகி உற்பத்தி 40% குறைந்து விட்டது. நவாகம் கிராமத்து விவசாயிகள் 500 அடி ஆழத்திற்குக் குழாய் போட்டுத்தான் நீர் எடுத்து பாசனம் செய்ய வேண்டியுள்ளது. கிராம மக்களோ 600 அடி ஆழத்திலிருந்துதான் குடிநீர் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆலைகள் பெருமளவு நிலத்தடி நீரை உறிஞ்சி விட்டதே இதற்குக் காரணம். நவாகம் கிராமத்தில் பலரது கை - கால்கள் பூஞ்சை நோய், சிரங்கு நோய் பிடித்துப் புண்ணாகி ரத்தமும் சீழும் வழிகிற நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனாலேயே பலர் இங்கு எவ்வளவு கூலி கொடுத்தாலும் விவசாயம் செய்ய மறுத்து பிழைப்புத் தேடி வெளியூருக்குச் செல்கிறார்கள். ஆற்றுநீர் நஞ்சாகியதும் நிலத்தடி நீர் நஞ்சாகியதும், இதற்குக் காரணம். வாட்வா பகுதி ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவு - புகை நாற்றத்தால் அருகிலுள்ள பள்ளிகளில் வகுப்பு நடத்த முடியாமல் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பிவிடுவது அடிக்கடி நிகழ்கிறது. ஆசிரியர்கள் பலர் நுரையீரல் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாகியுள்ளனர்.

மேற்கண்ட சுற்றுப்புறச் சூழல், சமூக பாதிப்புகளைச் சுட்டிக்காட்டி சுற்றுப்புற பாதுகாப்பாளர்களும், பாதிக்கப்பட்ட பகுதி மக்களும் பல வழக்குகளை, போராட்டங்களைத் தொடுத்தனர். இதன் விளைவாக கடந்த ஏப்ரல் மாதத்தில்



**இந்திய இயற்கை வளங்களை அழித்து அந்நியன் கொள்ளைக்குப் பாதை காட்டுவது, வலிந்து வரவேற்பது இங்குள்ள ஆளும் கும்பல்தான்.**



படிப்பகம்

www.padippakam.com

வாபி தொழிற்பேட்டையில் உள்ள 68 தொழிற்சாலைகளை மூடச் சொல்லியும், மே மாதத்தில் வாட்வா, ஆதவ், நரோடா பகுதிகளில் உள்ள 250 தொழிற்சாலைகளை மூடச் சொல்லியும் குஜராத் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேபோல் சுற்றுப்புறச்சூழல் பாதிப்பைச் சுட்டிக்காட்டித் தொடுக்கப்பட்ட வழக்கில் டில்லியிலுள்ள 256 சட்ட விரோத தொழிற்சாலைகளை மூடச் சொல்லியும், 8378 தொழிற்சாலைகளை உ.பி.மாநில நகரங்களுக்கு இடம் மாற்றிக் கோரியும் உச்ச நீதிமன்றம் உத்தரவு போட்டது. ஆனால், எங்கள் நகரத்தை மாசுபடுத்திக் கொள்ள விரும்பவில்லை எனக் கூறி ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது உ.பி. மாநில அரசு.

★★★

சுற்றுச்சூழலுக்கும், சமூகத்திற்கும் குறைந்த பாதிப்புகளை அல்லது பாதிப்பற்ற வகை உற்பத்தியைத் தங்கள் நாடுகளிலும் மிகுந்த பாதிப்புகளை உருவாக்கும் கழிவுகளை வெளியேற்றும் ஆலைகளை இந்தியா போன்ற வளரும் ஏழை நாடுகளிலும் அமைப்பது ஏகாதிபத்தியங்களின், வல்லரசு நாடுகளின் புதிய போக்காகும். தமது நாடுகளில் நகரங்களில் உபயோகமற்ற பிளாஸ்டிக் பொருட்கள், குப்பைகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் மக்களின் அதிகப்படியான விழிப்புணர்வு காரணமாகவும் தமது நாட்டில் தடைசெய்துவிட்டு அதே உற்பத்தியை ஏழை நாடுகளில் செய்ய மூலதனமிடுகிறார்கள். டி.டி.டி (D.D.T.) என்ற ரசாயனப் பொருள் உற்பத்தி அமெரிக்காவில் தடை செய்யப்பட்டு அந்நாட்டு முதலாளிகள் முதலீட்டில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. என்டோசல்பான், பாராகுவாட் போன்ற உரங்கள் பல முன்னேறிய நாடுகளில் தடைசெய்யப்பட்ட உற்பத்தி. இவை குஜராத் அங்கலேஸ்வரில் பல ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தற்போது இத்தகைய ஆலைகளை உற்பத்திகளை இந்தியா போன்ற நாடுகளில் தொடங்க முடியாத வண்ணம் மக்களின் விழிப்புணர்வு, போராட்டங்கள் பெருகி வருவது ஏகாதிபத்திய - வல்லரசு நாடுகளுக்கு ஒரு நெருக்கடியைத் தந்துள்ளது. இதனால்தான் "உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு" நடத்தியும் ஏழை நாடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கென பல அமைப்புகள் மூலம் நிதியுதவி செய்தும் நாடகமாடுகிறார்கள்.

உலக வங்கி மற்றும் தேசங்கடந்த, பன்னாட்டு தொழிற்கழகங்களின் நிதியில் இயங்கிவரும் உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு (GEF) என்ற அமைப்பு அண்மையில் 3875 கோடி ரூபாய் செலவில் 19 வகை திட்டங்களுக்காக இந்தியாவிற்கு நிதியுதவி செய்துள்ளது. இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத சூரிய ஒளி, காற்று, நீர் மின்சார உற்பத்திக்கும், தாவரம் மற்றும் சுரங்கத்திலிருந்து இயற்கை வாயு உற்பத்திக்கும் திட்டமிட்டுள்ளனர். இவை பெரும்பாலும் செயல்படாத நிலையை எட்டிவிடுகின்றன; அப்படியே செயல்பட்டாலும் இதன் சிறு உற்பத்தியும் பெருந் தொழிற்சாலைகளின் எரிபொருள் பற்றாக்குறைக்கு உதவத்தான் பயன்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சுற்றுச்சூழல் பாதிப்புள்ள ஆலைகளை அமைக்க அந்நிய முதலாளிகளுக்கு வழி திறந்து விட்ட துரோகத்தையும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து லாபமீட்டும் கொள்ளையையும் மறைப்பதற்காகவே, திசைதிருப்புவதற்காகவே தாமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு - நடவடிக்கை - நீதிமன்றத் தீர்ப்பு என

> சுற்றுச்சூழலுக்கும் சமூகத்திற்கும் பாதிப்பில்லா உற்பத்திகளை தமது நாடுகளிலும் மிகுந்த பாதிப்புள்ள உற்பத்திகளை ஏழைநாடுகளிலும் செய்வது ஏகாதிபத்திய நாடுகளின் புதிய போக்காகும்.

உள்நாட்டு தரகு முதலாளிகளும் ஆட்சியாளர்களும் நாடகமாடுகிறார்கள். தரகு முதலாளித்துவ கும்பல் தனியாக பல வகை அமைப்புகளுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு - ஆய்வுக்கென நிதியுதவி செய்து ஏய்ப்பதைப் பார்க்கலாம். மற்றபடி நீதிமன்றம் - அரசு நடவடிக்கைகளை உற்றுப்பார்த்தால் சில உண்மைகள் புரியும்.

அந்நிய முதலாளிகள், தரகு முதலாளிகளின் ஆலைகளால் விளைகிற சுற்றுச்சூழல் பாதிப்புகளைப் பற்றி பிரச்சனை வந்தால் அப்போது அதற்கு இணையாக சாதாரண நடுத்தர மக்களால் ஏற்படுகிற சிறு சிறு சுற்றுச்சூழல் பாதிப்புகளைப் பூதாகரப்படுத்திக் கொண்டு வந்து நிறுத்தி முதலாளித்துவ பிரச்சாரகர்கள் அதை நீர்த்துப் போகச் செய்கிறார்கள். இதே போல அரசும், ஆட்சியாளர்களும் சிறிய, நடுத்தர மற்றும் தேசிய தொழிற்சாலைகளால் ஏற்படுகிற சுற்றுச்சூழல் பாதிப்புகளையும் அதன் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் காட்டியும் ஏய்த்து விடுகிறார்கள்.

எந்த அந்நிய, தரகு முதலாளித்துவ தொழிற்சாலைகள் - உற்பத்திகள் மீதும் கை வைப்பதில்லை. "வேறு இடத்திற்கு மாற்றவும்" "சுற்றுச்சூழல் பாதிக்காவண்ணம் உயர்ந்த தொழில் நுட்பங்களை அல்லது சுத்திகரிப்பு முறையை நிறுவவும்," "சுற்றுச்சூழல் பாதிப்புள்ளதா என ஆய்வு கமிட்டி விசாரணை" என்று உற்பத்திக்கு பாதிப்பில்லாத நடவடிக்கைகள்தான் அந்நிய - தரகு முதலாளித்துவ ஆலைகள் மீது எடுக்கப்படுகின்றன. சிறிய நடுத்தர தோல்பதனிடும் தொழிற்சாலைகள், துணி - காகித ஆலைகள் மீது மட்டுமே நீதிமன்ற தீர்ப்புகள் வந்திருப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் முனைப்புக் காட்டுவதும் இறால் பண்ணைக்கு எதிராக வந்த நீதிமன்ற இடைக்கால தீர்ப்பும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதும் வேறு எந்த அந்நிய முதலீட்டு உற்பத்திக்கு எதிராக நீதிமன்ற தீர்ப்புகள் இல்லாததும் இதற்கு ஆதாரங்களாக உள்ளன.

ஒருபுறம் சுற்றுச்சூழலுக்கு எதிரான தொழிற்சாலைகள் மீது தாமே நடவடிக்கை எடுப்பதாக மாயையை உருவாக்கிக் கொண்டிருக்கும் இக்கும்பல் இன்னொருபுறம் தொழிற்சாலை சுற்றுச்சூழல் பாதிப்புக்கு எதிராகப் போராடும் மக்களை மூர்க்கமாக ஒடுக்குகிறது. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு விளைவிக்கிற அந்நிய நிறுவனங்களுக்கு நிலம், மானியம், வரி குறைப்பு எனப் பல சலுகைகளை வாரி வழங்குகிறார்கள். இத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரம், தகவல் தொடர்பு, போக்குவரத்து, நீர், கச்சாப் பொருள் எரிபொருள் முதலிய வசதிகளை நவீன முறையில் உடனடியாகவும் செய்து கொடுக்க உத்தரவாதமளிக்கிறார்கள். இதற்காகவே இத்துறைகளைத் தனியாருக்கு விட்டும் உதவி செய்கிறார்கள். அந்நிய முதலாளிகளும் ஏகாதிபத்திய வல்லரசுகளும் தமது உற்பத்திக்கு வேண்டிய வசதி மற்றும் பாதுகாப்பிற்காக போடக் கூடிய அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்வதையே அரசியல் கொள்கையாகக் கொண்டுள்ளனர், மத்திய மாநில ஆட்சியாளர்கள். எனவே சுற்றுச்சூழல் மற்றும் சமூக வாழ்விற்கு பாதிப்பை உருவாக்கும் அந்நிய நாட்டு முதலாளிகளின் தனிப்பட்ட அல்லது கூட்டு உற்பத்திக்கு எதிரான போராட்டத்தை மறு காலனியாக்கத்திற்கு எதிரான போராட்டத்துடன் இணைத்து இந்திய மக்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். சுற்றுச்சூழலை கெடுக்கும் ஆலைகளை அமைக்க இந்தியாவின் வளமான கடற்கரையோரங்கள், ஆற்றுப் படுகைகள், ஏரிப் பகுதிகளை குறிவைத்தே அந்நிய முதலீட்டாளர்கள் வட்டமிடுகிறார்கள். இப்பகுதிகளில் இதுவரை பாதிப்புக்குள்ளான மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி வந்தாலும் மிதவாதிகள் மற்றும் அந்நிய நாட்டு நிதியில் இயங்கும் தன்னார்வ குழுக்களின் துரோக - சமரச தலைமைக்கு இடம் கொடுத்துள்ளது, வருத்தமளிக்கிற விசயமே.

● ராசு



படிப்பகம்

www.padippakam.com

# தேசிய முன்னணியின் ஒப்பனை கலைந்தது

**தி.மு.க-வைப் புறக்கணித்துவிட்ட பாசிச ஜெயா கும்பலுடன் சந்தர்ப்பவாத கூட்டணி கட்ட தேசிய முன்னணித் தலைவர்கள் நாயாய் அலைகின்றனர்.**

''அரசியலில் எதுவும் நடக்கலாம்!'' — இது ஓட்டுப் பொறுக்கிகள் வகுத்துக் கொண்ட சித்தாந்தம். தமது பிழைப்புவாத, சந்தர்ப்பவாத பித்தலாட்டங்களை மக்களிடம் நியாயப்படுத்த உருவாக்கிக் கொண்ட பொன்மொழி. மக்களிடம் இந்த வாதம் ஏற்கனவே அம்பலப்பட்டுப் போயுள்ள நிலையில், தூய்மையான அரசியல் நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் ஜனதா தளத் தலைவர்கள் இப்போது ''அரசியலில் எதுவும் நடக்கலாம்'' என்று புதிதாகக் கடைவிரித்திருக்கிறார்கள்.

கர்நாடகத்திலும் பீகாரிலும் அண்மையில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஜனதா தளம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ஆந்திராவில் என்.டி.ஆரின் தெலுங்கு தேசக் கட்சி ஆட்சிக்கு வந்துள்ளது. இந்நிலையில், வருமாண்டில் நடைபெற உள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைக் குறிவைத்து பாரதீய ஜனதா தவிர காங்கிரசு எதிர்ப்பு சக்திகளை ஓரணியில் திரட்டுவதாகக் கூறிக் கொண்டு ஜனதா தளத்தில் ஒருபிரிவினர் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலை ஆதரிக்கக் கிளம்பியுள்ளனர்.

அடுத்துவரும் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பலம் பெற்று மத்தியில் ஆட்சி அமைக்க முடியாத சூழ்நிலை உள்ளதாக அரசியல் நோக்கர்கள் மதிப்பிடுகின்றனர். இந்நிலையில் தமிழகத்தின் அ.தி.மு.க.வை தேசிய முன்னணியில் சேர்த்துக் கொண்டால், தேசிய முன்னணியின் அரசை நிறுவுவதற்கு வாய்ப்புள்ளதாக ஜனதா தளத் தலைவர்கள் கணக்கு போடுகின்றனர்.

''ஜெயலலிதாவை தேசிய முன்னணியில் சேர்க்காவிட்டால், அவர் பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர்ந்து விடுவார். தமிழகத்திலும் பாண்டிச்சேரியிலும் 40 எம்.பி.க்கள் இருப்பதால் தேசிய முன்னணியில் அ.தி.மு.க.வைச் சேர்க்காவிட்டால் அது பாரதீய ஜனதாவுக்குச் சாதகமாகிவிடும். தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறமுடியாத சூழ்நிலை உள்ளதால், இந்த 40 எம்.பி.க்களின் மதிப்பு விலை மதிப்பிட முடியாதது'' என்று அவர்கள் வாதிடுகிறார்கள். இதோடு, தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க.விலிருந்து வை.கோ. விலகியதால், தி.மு.க.வின் செல்வாக்கு குறைந்து விட்டது என்று என்.டி.ஆர், ஹெக்டே, தேவ கௌடா முதலானோர் மதிப்பிடுகின்றனர்.

பதவியைப் பாதுகாத்துக் கொள்ளவும், தமது ஊழல், கிரிமினல் குற்றங்களிலிருந்தும் தப்பிக்கவும் காங்கிரசு எதிர்ப்பு வேஷங்கட்டி ஆடும் பாசிச ஜெயாவின் சாகசங்களைக் கண்டு இவர்கள் உச்சி குளிர்ந்து போகிறார்கள். காங்கிரசுடனான தேனிலவு முடிந்துவிட்ட நிலையில் மீண்டும் காங்கிரசுடன் ஜெயா கூட்டுச் சேரமாட்டார் என்று அவரை காங்கிரசு எதிர்ப்புச் சக்தியாக மதிப்பிடுகின்றனர்.

அதேசமயம் ராம்விலாஸ் பஸ்வான், சரத்யாதவ் முதலான வடமாநில ஜனதா தள தலைவர்கள் அ.தி.மு.க.வை தேசிய முன்னணியில் சேர்ப்பதைக் கடுமையாக எதிர்க்கின்றனர். ஆனாலும் பொம்மை, தேவகௌடா, ஹெக்டே, பிஜு பட்நாயக் ஆகிய ஜனதா தள தலைவர்களும், என்.டி.ஆரும் ஜெயாவை தேசிய முன்னணியில் சேர்க்க வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றனர்.

ஏனெனில் அ.தி.மு.க. கோடி கோடியாய் பண பலமும் குண்டர் பலமும் கொண்ட பாசிசக் கட்சி. தேர்தலில் அது எல்லா வகையான முறைகேடுகளையும் செய்து வெற்றி பெற வாய்ப்புள்ளது. ஆனால் தி.மு.க. மற்றும் பிற கட்சிகளால் இந்த அளவுக்கு வெற்றி பெற முடியாது என்பதே அவர்களது கணக்கு. எனவேதான் ஜெயாவின் பாசிச சதிராட்டங்களை நன்கறிந்த போதிலும் வெட்கமின்றி அவரை ஆதரிக்கக் கிளம்பிவிட்டனர். ஜெயா மீது சுப்பிரமணிய சாமி வழக்குத் தொடர ஆளுநர் அனுமதியளித்ததும் ஆளுநரின் நடவடிக்கைக்கு இத்தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தும், ஜெயாவை ஆதரிக்கவும் செய்தனர்.

வேடிக்கை என்னவென்றால் தேசிய முன்னணி அறிவித்துக் கொண்டுள்ள கொள்கைக்கும், ஜெயா கும்பலின் கொள்கைக்கும் ஒட்டோ, உறவோ என்றைக்குமே கிடையாது. இட ஒதுக்கீடு - சமூக நீதி என்பது தேசிய முன்னணியின் முக்கிய கொள்கை. இட ஒதுக்கீடு விவகாரத்தில் ஜெயா கும்பல் நடத்தி வரும் பித்தலாட்டம் நாடறிந்த ஒன்று. பதவிக்கு வருவதற்கு முன்பு இட ஒதுக்கீட்டை எதிர்த்து வந்தவர்தான் ஜெயா. எல்லாவற்றுக்கும் மேலாக, அ.தி.மு.க. எம்.பிக்கள் காங்கிரசு, பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து அன்றைய வி.பி.சிங் அரசைக் கவிழ்க்கத் துணை போயினர்.

இதேபோல், வகுப்புவாத எதிர்ப்பு - மதச்சார்பின்மை என்பது தேசிய முன்னணியின் முக்கிய கொள்கை. பாசிச ஜெயலலிதாவோ, டெல்லியில் நடந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் இந்துவெறியர்கள் அயோத்தியில் கரசேவை நடத்த வெளிப்படையாக ஆதரித்தவர். மசூதியை இடித்த இந்துவெறியர்களின் கடப்பாரை சேவைக்கு தமது கட்சிக் குண்

ஜெயாவிடம் கூட்டணிக்கான பேச்சுவார்த்தை நடத்தும் என்.டி.ஆர்.





படிப்பகம்

www.padippakam.com

டர்களை ரகசியமாக அனுப்பி வைத்தவர்.

பாசிச ஜெயா கும்பலிடம் ஜனநாயகம் என்பது மருந்துக்கும் கிடையாது. பயங்கரவாதத் "தடா" சட்டத்துக்கு நாடே கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த போதிலும், காங்கிரசு கட்சியிலேயே சிலர் அதை வெளிப்படையாக எதிர்த்த போதிலும், பாசிச ஜெயாவும் பாரதீய ஜனதா கட்சியும் மட்டுமே "தடா" சட்டத்தை ஆதரித்து நின்றனர்.

இப்படி எல்லா வகையிலும் தேசிய முன்னணிக்கு எதிரான பாசிசக் கொள்கையைக் கொண்டுள்ள ஜெயா கும்பலுடன் ஜனதா தளத் தலைவர்களும், என்.டி.ஆரும் வெட்கமின்றிக் கூடிக் குலாவுகிறார்கள். ஏற்கனவே இந்து வெறி பாரதீய ஜனதாவுடன் கள்ளக் கூட்டு வைத்துள்ள ஜெயா கும்பல், பொதுத் தேர்தலின் போது காற்று எந்தப் பக்கம் வீசுகிறதோ அந்தப் பக்கம் சாயலாம் என்ற நோக்கத்துடன் தேசிய முன்னணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. தற்போது கர்நாடகத்தில் எலகங்கா தொகுதியில் நடக்கும் இடைத் தேர்தலில் ஜனதா தளத்தை அ.தி.மு.க. ஆதரிக்கிறது. ஆனால், ஆறு மாதங்களுக்கு முன்பு நடந்த கர்நாடக சட்டமன்றத் தேர்தலின் போது இதே தொகுதியில் ஜனதா தளத்தை எதிர்த்து அ.தி.மு.க. போட்டியிட்டது.

கர்நாடக இடைத்தேர்தலின் போது தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க.விடம் சம்பிரதாய முறையில் கூட ஆதரவு கோராமல் ஜனதா தளத் தலைவர்கள் புறக்கணித்துள்ளனர். இதே போல, ஆந்திர மாநில முதல்வராக என்.டி.ஆர். பதவியேற்ற நிகழ்ச்சிக்கு ஜெயலலிதாவுக்கு அழைப்பு விடுத்த அதே சமயம், தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அழைப்பு ஏதும் தராமல் என்.டி.ஆர் அலட்சியப்படுத்தியுள்ளார். பதவியேற்றபின் சென்னையில் நடந்த தெலுங்கு மாநாட்டிற்கு வந்த என்.டி.ஆர். அப்போதும் கூட தி.மு.க. பிரமுகர்களைச் சந்திக்கவில்லை. அதே சமயம், ஜெயா கொடுத்த விருந்தில் தனது புது மனைவியோடு பூரித்துப் போனார்.

இப்படி தி.மு.க.வை அவமதித்துப் புறக்கணிப்பதன் மூலம் அக்கட்சியை காங்கிரசுக் கூட்டணியின் பக்கம் தள்ளி விடுவது, பின்னர் தி.மு.க. மீது பழி போட்டு தமது துரோகத்தனத்தை நியாயப்படுத்துவது என்கிற உத்தியோடுதான் தேசிய முன்னணி தலைவர்கள் செயல்படுகிறார்கள்.

• குமார்.

## நரகலில் நல்லரிசி தேடும் 'மார்க்சிஸ்டு'க

'மார்க்சிஸ்ட்' கட்சியின் கலை இலக்கிய அமைப்பான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், நண்பர்கள் நற்பணி இயக்கம் என்ற அமைப்பும் இணைந்து கம்பம் நகரில் கடந்த மே மாதம் 27-ந் தேதியன்று "கலை இலக்கிய மாலை" என்ற பெயரில் சீரழிந்த கூத்தொன்றை நடத்திக் காட்டினார்கள். காங்கிரசு கட்சியைச் சேர்ந்த கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் O.R இராமச்சந்திரனும், 'மார்க்சிஸ்ட்' கட்சியினைச் சேர்ந்த நைனார், போஸ் என்ற இருவரும் இவ் 'விழா'வில் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

O.R. இராமச்சந்திரன் தனது உரையில் 'மார்க்சிஸ்டு'களை "தோழர்" என அழைத்து அன்பு மழை பொழிந்தார். இதில் நனைந்து போன போலிகள் தங்கள் பங்குக்கு அவரை "தம்பி" என அழைத்தும், கறை படியாத கரங்களைக் கொண்டவர் எனச் சான்றிதழ் வழங்கியும் பாசத்தைக் காட்டிக் கொண்டார்கள். மேலும் நாட்டின் விடுதலைக்கு துரோகமிழைத்த காங்கிரசின் காந்தி தொடங்கி, ராஜீவ், அண்ணாவையும் குறிப்பிட்டு, அவர்களின் தன்னலங்கருதா சேவையை உ
முகர்ந்து தாங்கள் அரசியல் ரீதிய
சீரழிந்து போயிருப்பதைக் காட்டி
கொண்டார்கள்.

பேராசிரியர் ஒருவர் கலாச்சா
சீரழிவைப் பற்றி வாய் கிழியப் பேசி
மேடையை விட்டு இறங்கிய மறு நிமிடமே, "முகாப்லா" போன்ற 'முற்போக்கு' பாடல்களை ஒலிபரப்பினார்கள். இதோடு விநாயகர் துதிப் பாடலையும் ஒலிபரப்பி பழமையிலும் புதுமை ஆராய்ச்சி நடத்திக் காட்டினார்கள். இப்பாடல்களுக்கு ஏற்றார் போன்று மேற்கத்திய சீரழிவு நடனங்களை ஆடிக்காட்டி, மைக்கேல் ஜாக்சனுக்கும் பிரபுதேவாவுக்கும் சவால் விட்டார்கள் அவ்விரண்டு அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள். இந்த லட்சணத்தில் "புரட்சியில் இளைஞர்களின் பங்கு" எனும் தலைப்பில் பேசும்படியும் பேச்சாளர் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். இத்தலைப்பு முரண்பாடானது என நினைத்தார்களோ என்னவோ, அவருக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

**தகவல்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி, கம்பம்**

## தட்டியைத் திருடும் கம்பம் நகர போலீசு

இந்த வருடம் சனவரி 1-ந் தேதி முதல் உலக வர்த்தக நிறுவனம் (WTO) நடைமுறைக்கு வருவதையொட்டி, கம்பம் நகரில் வி.வி.மு. அமைப்பினர், "இனி இந்திய அரசியல் சட்டம் அடுப்புலைக்குள் செல்லும், பாராளுமன்றம் உலக வர்த்தக நிறுவனத்தின் சட்டங்களை அமுல்படுத்தும், அதனின் கிளையாகும்" என நாடு ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைக்கப்படுவதை அம்பலப்படுத்தி தட்டி எழுதி வைத்திருந்தனர். அன்று மதியமே தட்டியைக் கழட்டிச் சென்று தனது ஏகாதிபத்திய விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது போலீசு. ஆறு மாதங்களாகியும் தட்டியைத் திருப்பித் தராமல், மழுப்பலான காரணங்களைக் கூறி இழுத்தடிக்கிறது.

இது மட்டுமின்றி, கடந்த நான்கு வருடங்களாகவே வி.வி.மு. பொதுக்கூட்டம் நடத்துவதற்கு "சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படும்" என அங்கலாய்த்துக் கொண்டு அனுமதி மறுத்து வருகிறது, போலீசு துறை. "வி.வி.மு.வின் பிரச்சாரம் மக்களை அவர்கள் பக்கம் அணி சேர்த்து விடும்" என்ற அச்சம் கொண்டே, இந்த அடிப்படை சனநாயக உரிமையைக் காலில் போட்டு மிதித்து வரும் போலீசுக்கு நீதிமன்றமும் வக்காலத்து வாங்குகிறது.

**தகவல்!**
**விவசாயிகள் விடுதலை முன்னணி, கம்பம்.**

## "அழகு" என்ற பெயரில் அட்டூழியம்

சென்னை நகரை 'அழகு' படுத்துவதற்காக "எழில் மிகு சென்னை 2000" என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது ஜெயா கும்பல். கூலித் தொழிலாளர்களின் குடிசை வீடுகளும் நடைபாதைகளில் கடை போட்டு பிழைத்து வரும் சிறு வியாபாரிகளும் தான் இத்திட்டத்திற்கு பலியாகி வருகிறார்கள். ஜூன் 3-ந் தேதியன்று சென்னையின் ஜாபர்கான் பேட்டை பகுதியிலுள்ள பிள்ளையார் கோயில் தெருவில் மாநகராட்சி அதிகாரிகள் போலீசுடன் படை சூழ வந்து, எந்தவித முன்னறிவிப்பும் தராமல் புல்டோசரைக் கொண்டு அங்கிருந்த குடிசைகள் சிறு பட்டறைகள், கடைகள் அனைத்தையும் இடித்துத் தள்ளிவிட்டார்கள். பொருட்களை இடமாற்றி வைக்கக் கூட அதிகாரிகள் நேரம் தரவில்லை. கைகளில் கிடைத்தவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு குழந்தை குட்டிகளோடு கொளுத்தும் வெயிலில் நிழலுக்கு ஒதுங்கக் கூட இடமின்றி தவித்துப் போயினர், அப்பகுதி மக்கள். பகுதியிலுள்ள புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணித் தோழர்கள் கண்டித்து உடனடியாக சுவரொட்டிகள் ஒட்டி எதிர்ப்பு தெரிவித்தனர். மக்களிடையே சிறந்த வரவேற்பை பெற்று தந்தது.

**தகவல்:**
**புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி சென்னை**

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd, Madras - 600 024. Editor:R.SHANMUGARAJ

படிப்பகம்

www.padippakam.com



த
வர்
டம்
எண்
தெரிய
வ தெரி
கூட. நாம்
கொள்ள
நபர் நகரத்தில்
குறிப்பிட்ட
லவுக்குள் இருக்
பட்சத்தில் இந்த
ஜிங்'' வசதியின்
லம் எளிதாகத்
தொடர்பு கொண்டுவிட
லாம். அமைச்சர் தனது
கைகளில் விரித்துக் காட்டும் அந்தச் சிறிய கருவி, நாம் தெரிவிக்க வேண்டிய விசயத்தை அவருக்குத் தகவலாகக் கொடுத்துவிடும். செயற்கைகோள் உதவியுடன் ஒரு நிமிட நேரத்திற்குள் இத்தகவல் பரிமாற்றம் நடந்து முடிந்து விடுகிறது. நாட்டின் பெரு நகரங்களில் ''பேஜிங்'' சேவையைத் தனியார் நிறுவனங்கள் தொடங்கி நடத்தவும் மேட்டுக் குடியினர் இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளவும் அரசு காட்டி வரும் அக்கறைக்கு அளவேயில்லை. பண்பலை (FM) ஒலிபரப்பை 24 மணி நேரத்திற்கு நீட்டித்துக் கொடுத்துள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ, ஒரே சமயத்தில் நான்கு குழந்தைகளைப் பறி கொடுத்துவிட்டு கதறி அழும் தாயார். நோய்வாய்ப்பட்டோ விபத்திலோ இறந்து போகவில்லை இச்சிறார்கள். சென்னை மாநகராட்சியின் அலட்சியப் போக்குதான் இக்குழந்தைகளைச் சாகடித்துவிட்டது. கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டின் அருகே கழிவு நீரை அகற்றித் தோண்டிய பத்தடி ஆழமுள்ள குழியை மூடாதுவிட்டுள்ளனர் மாநகராட்சி அதிகாரிகள். மே மாத துவக்கத்தில் பெய்த மழையினால் தண்ணீரும் சேறும் சகதியும் நிறைந்து குழி இருந்த இடம் தெரியாது மறைந்து போனது. ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு அவ்வழியே நடந்து வந்த அக்குழந்தைகள் குழியிருப்பது அறியாது அதனுள் மூழ்கி இறந்து போயினர். ''அடையாளத்திற்கு ஒரு கம்பை நட்டு வைத்திருந்தால் கூட புள்ளங்க உயிர் பிழைத்திருக்கும்; அதற்குக் கூடவா வக்கில்லை அரசாங்கத்திடம்'' எனக் குமுறும் அத்தாயை என்ன சொல்லி தேற்றுவது?

அணியும் உடை, உண்ணும் உணவு, சொகுசான வாழ்க்கைக்கு நவீன விஞ்ஞான வசதிகள் - எல்லாம் சர்வதேச தரத்தில் மேட்டுக் குடியினருக்கு; கூடுதல் விலையில் புழுத்துப் போன ரேஷன் அரிசி, சாக்கடையோடு கலந்து வரும் குடிநீர், மழை பெய்தால் சேறும் சகதியுமாக தெருக்கள், இவற்றோடு பிளேக், மலேரியா தொற்று நோய்ச் சாவுகள் - இவைதான் அடித்தட்டு மக்களுக்கு கடந்த நான்காண்டுகளில் தாராளமயமாக்கல் இவை தவிர சாதித்தது வேறென்ன?

படிப்பகம்